பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 28 சனிக்கிழமை (12.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :106

இராணுவ அத்துமீறல் சம்பவங்கள் அதிகரிக்கின்றன

# சாவகச்சேரியிலும் பருத்தித்துறையிலும் படையினருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி

## பதற்றமும் குழப்பமுமான சூழ்நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 12

**குடாநாட்டில் இராணுவ அத்துமீறல்கள், இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் அதிகரித்து வருவதால் ஆங்காங்கே படையினருக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பெரும் பதற்றமும் குழப்பமுமான சூழ்நிலை பரவலாக எங்கும் உருவாகி வருகின்றது.**

கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். நகரில் இராணுவ வாகனம் ஒன்று மோதி பாடசாலை மாணவி உயிரிழந்ததை அடுத்துப் பெரும் களேபரம் உருவாகியது தெரிந்ததே.

அதன்பின்னர் நேற்றுமுன்தினம் நீர்வேலிப் பகுதியில் தனித்திருந்த வயோதிபப் பெண் ஒருவரை சிப்பாய் ஒருவர் வல்லுறவு புரிய முனைந்த சம்பவத்தை அடுத்து அப்பிரதேச மக்கள் இராணுவத்தினருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதால் அங்கு அல்லோலகல்லோலம் ஏற்பட்டது.

நீர்வேலிச் சம்பவம் ஏற்படுத்திய பரபரப்பு அடங்குவதற்கு முன்பாகவே நேற்று அதிகாலை வேளை பருத்தித்துறையில் கரவெட்டி கலிகைச் சந்திப் பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புக்குள் தகாத செயல் புரியும் நோக்கத்துடன் சீருடையினர் சிலர் இருளோடு இருளாக ஊடுருவி மறைந்திருந்துள்ளனர்.

கரிப்புரத்தான் என்ற குடியிருப்பினுள் சுமார் ஆறு சிப்பாய்கள் நுழைந்துகொண்டதை அறிந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலிச் சம்பவம் கண்டித்து திங்களன்று யாழ்.நகரில் பேரணி

யாழ்ப்பாணம்,மார்ச்12

நீர்வேலிப் பகுதியில் வயோதிபப் பெண் மீது சிப்பாய் மேற்கொண்ட வல்லுறவு முயற்சியைக் கண்டித்து நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ். நகரில் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பேரணிக்கு கூட்டுறவாளர்கள் அனைவரும் தமது ஆதரவைத் தெரிவிப்பதுடன். அனைத்து பல நோ.கூ. சங்கங்கள் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் தத்தமது தலைமை அலுவலகங்களை மூடி அனைத்துப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மோ. சைக்கிளை மோதிய இராணுவ வண்டியை அப்புறப்படுத்த முயன்றதால் மக்கள் கடும் சீற்றம்


விபத்தில் சம்பந்தப்பட்ட டிரக்

சாவகச்சேரி.மார்ச்12

சாவகச்சேரி நகரில் நேற்று இடம்பெற்ற இராணுவ - சிவிலியன் வாகன விபத்தைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

விபத்தில் தொடர்புபட்ட இராணுவ டிரக்கை அதன் சாரதி உடனடியாக அருகிலிருந்த இராணுவ முகாமுக்குள் கொண்டுசென்றார். இதனைக் கண்ட மக்கள் ஆத்திரமடைந்து படையினருக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட ஆரம்பித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது :-

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தின் டிரக்கும் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி நகரில் வேம்படிச் சந்தியில் விபத்துக்குள்ளாகின.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்தவரான சின்னத்தம்பி மனோகரன்(வயது 45) என்ற நபர் காயமடைந்தார். உடனடியாக அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்துடன் தொடர்புபட்ட டிரக்கை அதன் சாரதி அங்கிருந்து அகற்றி அருகிலுள்ள இராணுவ முகாமுக்குக் கொண்டுசென்றுள்ளார். இதனைக் கண்ட மக்கள் படையினருக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டனர்.

உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்த பொலீஸார். மக்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி விபத்தில் தொடர்புபட்ட இராணுவ டிரக்கை முகாமிலிருந்து மீட்டு, மீண்டும் விபத்து நடந்த இடத்தில் கொண்டுவந்து நிறுத்தினர். அதற்குத் தீவிர பாதுகாப்பும் போடப்பட்டது.

எனினும், பொதுமக்கள் விபத்துக்குக் காரணமான இராணுவச் சாரதி மீது நடவடிக்கை

(16ஆம் பக்கம் பார்க்க)


சம்பவ இடத்தில் படையினர், பொலீஸார்.

## இரவில் தகாதசெயல் புரியும் நோக்குடன் குடியிருப்பினுள் சிப்பாய்கள் நுழைந்ததால் கரவெட்டியில் பெரும் களேபரம்

### *வீதியில் ரயர்கள் எரிப்பு! கண்ணீர் புகை வீச்சு! வேட்டுக்கள் தீர்ப்பு!*

கரவெட்டி,மார்ச்12

பருத்தித்துறை. கரவெட்டியில் கலிகைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் சிப்பாய்கள் புகுந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொதித்தெழுந்த மக்கள் நேற்று வீதித் தடைகளை ஏற்படுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

கலிகைச் சந்தியில் வீதித் தடைகளை ஏற்படுத்தி. ரயர்களை எரித்து. படையினருக்கு எதிரான போராட்டங்களை மக்கள் முன்னெடுத்தனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் ஆறுக்கும் மேற்பட்ட படையினர் கலிகைச் சந்திக்குச் சமீபமாக உள்ள கரிப்புரத்தான் என்னும் கிராமத்துக்குள் நுழைந்துள்ளனர். அக்கிராம மக்கள் அந்தச் சிப்பாய்களுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். அவர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு கோரினர். சிப்பாய்கள், அதனை அலட்சியப்படுத்தினர். இதனால் பொதுமக்கள் திரண்டு அவர்களைத் துரத்தினர். உடனடியாகப் பின்வாங்கிய சிப்பாய்கள் தமது முகாமுக்குள் மறைந்துவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யார்க்கரு இராணுவ முகாமில் மக்கள் முறைப்பாடு செய்தனர். எனினும், முறைப்பாடு தொடர்பாகப் படை அதிகாரிகள் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து. பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை நேற்றுக்காலை ஆரம்பித்தனர்.

கலிகைச் சந்தியில் வீதித் தடைகளைப் போட்டு. ரயர்களைக் கொளுத்தி. படையினருக்கு எதிராக அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

அந்தப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது கற்களை வீசினர். முகாம் வேலிகளை எரித்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

"இராணுவமே வெளியேறு!". "அட்டூழியம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## முதலில் பொதுக்கட்டமைப்பில் இணக்கம் அடுத்து சமாதான முயற்சிகள் முன்னெடுப்பு!

### *சு.க. மாநாட்டில் ஜனாதிபதி அறிவிப்பு*

கொழும்பு.மார்ச்12

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளைக் கையாள்வது தொடர்பான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது குறித்து விடுதலைப் புலிகளோடு ஓர் இணக்கத்துக்கு அரசு முதலில் வரவேண்டும். பின்னர் அதனடிப்படையில் ஏற்படும் நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் ஜனாதிபதி அறிவித்தார். மேற்படி விடயத்தை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றும் அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 15ஆவது மகா சம்மேளனக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் மஹரகமவிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது. ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்தி, அதனூடாகச் சமாதான முயற்சிகளை முன்னெடுத்தல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், அரசமைப்பை மாற்றுதல், தேர்தல் முறைமையை மாற்றுதல் உட்பட 10அம்சத் தீர்மாணங்களும் இங்கு நிறைவேற்றப்பட்டன. இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.



அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டமைப்புப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பொன்றை முதலில் ஏற்படுத்தவும் அதனூடாகச் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும் கோரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடன் பேச்சு வேண்டாம் என்று ஜனாதிபதி உத்தரவு!

கொழும்பு,மார்ச்12

அரசினுள் நிலவும் உட்பூசல்களைத் தீர்த்துக்கொள்ளும் முயற்சி என்ற போக்கில் ஆட்சிப் பங்காளிகளான ஜே.வி.பியினருடன் எதுவித இணக்கப் பேச்சுக்களையும் நடத்த வேண்டாமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது நெருக்கமான அமைச்சர்களைப் பணித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

முன்னதாக அரசினுள் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது தொடர்பில் கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜே.வி.பி. பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கிறார்.

வாரந்தோறும் இவ்வாறான பேச்சுக்களை

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




நேற்றைய எதிர்ப்புப் போராட்டத்தையடுத்து கலிகைச் சந்திப் பகுதியில் பொதுமக்கள் ரயர்களைக் கொளுத்தி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதையும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலீஸார், வடமராட்சி அரசியல் துறையினருடன் பேச்சு நடத்துவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள் : சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

# விபத்து நடக்கும் இடத்துக்கு உடன் விரைய விசேட போக்குவரத்துப் பொலீஸ் குழு

## நீதித்துறையினரிடம் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்12

குடாநாட்டில் எங்காவது வீதி விபத்து இடம்பெற்றால் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்து சென்று நடவடிக்கைகளை எடுப்பதற்காகப் போக்குவரத்துப் பொலீஸ் பிரிவின் விசேட குழு ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.தல்பதாது இவ்வாறு நீதித்துறையினருக்குத் தெரிவித்திருக்கின்றார்.

வீதி விபத்துக்களை அடுத்து பொதுமக்கள் ஆத்திரம்கொண்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்குவதால் ஏற்படும் களேபரங்களைத் தவிர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக யாழ். நீதித்துறையினருக்கும் பொலீஸ் அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் யாழ். நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இச்சந்திப்பில் நீதித்துறையினர் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:-

★ வீதி விபத்து ஒன்று இடம்பெற்றால் 10 நிமிடம் முதல் 30 நிமிடநேர இடைவெளிக்குள் அந்தப் பிரதேசத்தைப் பொலீஸார் பொறுப்பேற்கவேண்டும்.

★ விபத்துக்கான எந்தத் தடயத்தையும் அழிக்காமல் பாதுகாக்க வேண்டும்.

★ விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் நீதிவான் பார்வையிட முன்னர் சம்பவ இடத்தில் இருந்து அகற்றப்படக்கூடாது.

★ சம்பவம் நடந்து 30 நிமிடத்துக்குள் நீதிவான் சம்பவ இடத்தைப் பார்வையிடத்தக்க ஏற்பாடுகளைப் பொலீஸார் மேற்கொள்ளவேண்டும்.

இந்த விடயங்களை ஏற்றுக்கொண்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர், எதிர்காலத்தில் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கப் பொலீஸ் குழு ஒன்று தயார் நிலையில் இருந்து செயற்படும் என்று உறுதியளித்தார். (ஜ-3)

# இன்றைய ஆட்டங்கள்

கைதடி,மார்ச்12

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி மத்தி- வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - சிறிதுர்க்கா வி.க. எதிர் சரஸ்வதி வி.க.

★ மாலை 5 மணி - கலாஜோதி வி.க. எதிர் ஞானப்பிரகாசர் வி.க. (3-75)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்12

எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் வெற்றிக்கிண்ணத் திற்காகத் திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்படும் 11 பேர் பங்குகொள்ளும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 8 மணி எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் அணி எதிர் கொமர்ஷல் வங்கி அணி.

★ முற்பகல் 10.30 மணி - யாழ். தபாற் கந்தோர் அணி எதிர் யாழ். உள்ளூராட்சித் திணைக்களம்.

★ நண்பகல் ஒரு மணி யாழ். பல்கலைக் கழக ஊழியர் அணி எதிர் நல்லூர் பிரதேச சபை அணி.

★ பிற்பகல் 3.30 மணி தேசிய சேமிப்பு வங்கி அணி எதிர் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அணி. (3-190)

# நீர்வேலி சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சிப்பாய்க்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்12

நீர்வேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீட்டில் தனித்து இருந்த வயோதிபப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான சிப்பாயை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட அச்சுவேலி இராணுவ முகாமைச் சேர்ந்த பெரும் முத்துலாகே விமலரத்ன (வயது 24) என்ற சிப்பாயை கோப்பாய் பொலீஸார், யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று ஆஜர்செய்தனர்.

இவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும் -

அன்றையதினம் அடையாள அணிவகுப்பில் நிறுத்த வசதியாக மூடியவாகனத்தில் அவரை நீதிமன்றத்துக்கு அழைத்துவரும்படியும் - நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் பிரஸ்தாப வயோதிபப் பெண்ணை சட்ட வைத்திய அதிகாரி மூலம் பரிசோதனை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

(ஜ-3-201-204)

# கட்டுமானத் தொழிலாளர் நிலை: ஆராய வியாழனன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்12

கட்டுமானப் பணிகளை விரிவுபடுத்தவும் நிர்வாக ரீதியாக ஒழுங்குபடுத்தவும் நோக்கமாககொண்டு அனைத்து மேசன், தச்சுத் தொழிலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இக் கலந்துரையாடலில், தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வு, வளம் பற்றியும் அவர்களுக்கான காப்பு நிதி நடைமுறை பற்றியும் தொழிலாளர்களின் பற்றாக்குறையைத் தீர்ப்பதுபற்றியும் இவர்களுக்குச் சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம்பற்றியும் ஆராயப்படவுள்ளது.(-3)

# கூட்டம்

யாழ்ப்பாணம்.மார்ச்12

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையை மீள இயங்கச் செய்வது தொடர்பான கூட்டம் இன்று காலை 11.30 மணிக்கு தீவகம் வடக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)






சாவகச்சேரிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தையடுத்து பொலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் இளைஞர்களையும், சேதமாக்கப்பட்ட காவலரண் ஒன்றையும், தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரனுடன் பொலீஸார் பேச்சு நடத்துவதையும் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி பொதுமக்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள் : கொடிகாமம் செய்தியாளர்)*

# மருத்துவ மாணவர்கள் நேற்றும் போராட்டம்

## துணைவேந்தர் அலுவலகம் முன் எலும்புக்கூடுகள்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் தமக்குரிய சத்திர சிகிச்சை கற்கை நெறியினை உடன் ஆரம்பிக்குமாறுகோரி நேற்றும் துணைவேந்தர் அலுவலக நுழைவாயிலை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"இறுதியாண்டு சத்திரசிகிச்சை கற்கைநெறி ஆரம்பிக்கப்படும் வரை துணைவேந்தரை அவருடைய அலுவலகத்தில் அனுமதிக்கமாட்டோம்" என்று எழுதப்பட்ட பதாகையினை வாசலில் கட்டிவிட்டு அதற்கு முன்பாக அமர்ந்திருந்த அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாம் கற்பதற்குத் தயாரான நிலையில் இருந்தும் கற்பிற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டும் முகமாகத் துணைவேந்தரின் அலுவலக வாசலில் எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகள் என்பவற்றை வைத்திருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மருத்துவர்களுக்கான உடையையும் அணிந்திருந்தனர்.

கடந்த மூன்று மாத காலமாக இடைநிறுத்திவைக்கப்பட்டிருக்கும் சத்திரசிகிச்சைக்கான கற்கைநெறிகளை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி கடந்த 7ஆம் திகதி முதல் மருத்துவபீட இறுதிவருட மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-13)

# மட்டு. புளொட் முகாம் மீது கிரனேட் வீச்சு; மூவர் காயம்

மட்டக்களப்பு,மார்ச்12

மட்டக்களப்பு புளொட் அலுவலகத்தின் மீது நேற்றுப் பிற்பகல் 1.55 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு லேக் வீதியில், போதனா வைத்தியசாலைக்கு முன்னால் அமைந்துள்ள புளொட் அலுவலகமே தாக்குதலுக்கு இலக்கானது. அலுவலகத்தின் பின்னாலுள்ள காட்டினூடாக வந்தவரே குண்டை வீசிவிட்டுச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புளொட் அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர் ரதன் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் பகீரதன்(வயது 45), காந்தன் என அழைக்கப்படும் தம்பிராசா பாலசுந்தரம்(வயது 32), வெள்ளை என அழைக்கப்படும் நாகமணி சிவராசா(வயது 45) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர். (எ-க-12)

# கிண்ணியாவில் மாணவர் போராட்டம்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு, கிண்ணியா மத்திய கல்லூரியில் தஞ்சம் புகுந்திருக்கும் அகதிகளை இடம்மாற்றக்கோரி அப்பாடசாலை மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பாடசாலை, வலயக் கல்விப் பணிமனை, பிரதேச செயலகம் என்பன செயலிழந்தன.

மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து, வலயக் கல்விப் பணிமனை, பிரதேச செயலகம் என்பவற்றின் பிரதான வாசலை மூடி, பேராட்டத்தில் ஈடுபட்டனர். அலுவலகர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படாததால் அந்த அலுவலகங்களில் வழமையான பணிகள் பாதிப்படைந்தன.

(எ-க-12)

# ஈராக்கில் குண்டுத்தாக்குதல் 47 பேர் பலி; 100 பேர் படுகாயம்!

பக்தாத்,மார்ச்12

ஈராக்கின் மொசூல் நகரில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 47 பேர் உயிரிழந்தனர். ஷியாப் பிரிவு முஸ்லிம்களின் மரணச் சடங்கு ஒன்றில் இடம்பெற்ற இந்தக் குண்டுவெடிப்பில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயமுற்றுள்ளனர் என்று ஈராக் மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மொசூல் நகரில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு அருகில் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. மேற்படி தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு சுனிப்பிரிவு முஸ்லிம் கிளர்ச்சிவாதிகளே காரணம் என ஈராக் அதிகாரிகள் கூறினர்.

இவ்வாறான தாக்குதல்களின் மூலம் ஷியா மற்றும் சுனி முஸ்லிம்களுக்கு இடையில் இனக்கலவரத்தை ஏற்படுத்துவதற்கு கிளர்ச்சிவாதிகள் முயற்சிக்கின்றனர் என்றும் ஈராக் அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர்.

மொசூல் நகரில் தொடர்ச்சியாகத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் என்பன இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

பக்தாத்தில் பொலீஸ் சீருடை அணிந்த கிளர்ச்சி வாதி ஒருவர் சோதனைச் சாவடிக்குச் சமீபமாகப் பொலீஸ் அதிகாரி ஒருவரின் வாகனத்தை மறித்துத் தாக்கு தல் நடத்தினார் - இதில் அந்தப் பொலீஸ் அதிகாரி உயிரிழந்தார்.

அத்தோடு, ஈராக்கின் மேற்குப் பகுதியில் பொலீஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது கிளர்ச்சிவாதிகளால் படுகொலைசெய்யப்பட்டு, கைவிடப்பட்ட நான்கு ஈராக்கிய சிப்பாய்களுடைய சடலங்களைக் கண்டெடுத்தனர்.

இததகைய தாக்குதல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் வகையில் பயிற்சி பெற்ற புதிய பொலீஸ் - இராணுவப் பாதுகாப்புப் படையினரை ஈராக் இடைக்கால அரசு சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

இவாகள் அதிதீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர். அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படையினரின் உதவியுடன் கிளர்ச்சிவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையிலும் இப்படையினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)



குண்டுவெடிப்பில் காயமடைந்தோர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்படுவதையும் சிகிச்சையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



## சார்க் உச்சி மாநாட்டுக்கு புதிய திகதி குறிக்க பாக். முடிவு

இஸ்லாமாபாத்,மார்ச்12

பங்களாதேஷில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டுக்குப் புதிய திகதியைத் தீர்மானிக்க சார்க் அமைப்பிற்கு தற்போது தலைமை வகிக்கும் பாகிஸ்தான் முடிவுசெய்துள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவிருக்கும் 13ஆவது சார்க் உச்சி மாநாட்டை எதிர்வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் நடந்த பாகிஸ்தான் தீர்மானித்துள்ளது.

திகதியை உறுதிசெய்வதற்கு முன்னர் இந்தியா உட்பட ஏனைய சார்க் நாடுகள கலந்தாலோசிக்கப்படவுள்ளன.

ஏனைய நாடுகளின் அனுமதி கிடைத்ததன பின் அடுத்தவாரம் திகதியைத் தான் வெளியிடும் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் இந்தத் தீர்மானத்திற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் சாதகமான பதில் தெரிவித்துள்ளார் எனவும் தகவலொன்று தெரிவித்தது.

இதற்கு முன்னர் சார்க் உச்சிமாநாட்டுககான திகதிகள் இருமுறை ஒத்திவைக்கப்பட்டன. ஆழிப்பேரலை அனர்த்தம், நேபாளத்தில் திடீரென ஏற்பட்ட ஆட்சிக்கலைப்பு என்பவற்றின் காரணமாக இருமுறையும் திகதிகள் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## விமான விபத்தில் 14 ரஷ்யர்கள் பலி !

செச்சினியாவில் ரஷ்ய எம்.ஐ.ரக ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 14 ரஷ்யர்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

செச்சினியாவின் தலைநகர் குரொல்னியில் நேற்றுமுன்தினம் பறந்துகொண்ருந்த எம்.ஐ.8 ஹெலிக்கொப்டரே இவ்வாறு விபத்துக்குள்ளானது. ஹெலிக்கொப்டர் மின்சார கம்பமொன்றில் மோதியதனாலேயே விபத்துக்குள்ளானது என்று ரஷ்யாவின் அவசர நிலைமைகளுக்குப் பொறுப்பான அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

ஹெலிக்கொப்டா விபத்துக்குள்ளானவுடன் அதிலிருந்த 14 பேரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். கடுங்காயத்துக்குட்பட்ட இரு விமானப் பணியாளர்களும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-8)

# சீனாவுடன் இணைந்து செயற்படுவதற்கு திபெத் தலைவர் இணக்கம் தெரிவிப்பு

புதுடில்லி,மார்ச்12

மக்கள் சீனக்குடியரசுக்குள் திபெத் நாடு இணைந்து செயற்படுவதற்குத் தான் விருப்பம் தெரிவிக்கிறார் என்றும் -

அந்த நாட்டுக்கான - திபெத்துக்கான - சுதந்திரத்தைக் கோரப்போவதில்லை என்றும் -

தற்சமயம் இருந்துவரும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் நடுநிலையான போககைக் கடைப்பிடிக்கத் தயாராகவிருக்கிறார் என்றும் -

திபெத்தின் ஆன்மீகத் தலைவரும்,நோபல் பரிசு பெற்றவருமான தலாய்லாமா தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று முன்தினம் அவர் விடுத்த அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன ஆட்சிக்கு எதிராக 1959ஆம் ஆண்டில் நடைபெற்ற கிளர்ச்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தலாய்லாமா இந்தியாவிற்குத் தப்பிச்சென்றிருந்தார்.

இந்தக் கிளர்ச்சியின் 46ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையிலான கொண்டாட்டத்தின்போதே மேற்படி வேண்டுகோளை தலாய்லாமா விடுத்தார்.

இந்தியாவின் ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள தர்மசாலையில் இருந்து அவரின் தலைமையிலான வெளிநாட்டிலிருந்து செயற்படும் அரசு இயங்கிவருகின்றது.

சீனாவிற்கும், வெளிநாடுகளில் தங்கியிருக்கும் திபெத்தியர்களுக்கும் இடையிலான நேரடித் தொடர்புகள் 20 வருடங்களுக்குமேல் இடம பெறவில்லை. இருந்தபோதிலும், இரண்டு வருடங்களுக்கு முன்னர் திபெத்தியப் பிரச்சினைக்கு முடிவுகாணும் வகையில் இரு தரப்பினரும் உத்தியோகபூர்வமற்ற முறையில் தொடர்புகளை ஏற்படுத்திவந்துள்ளனர்.

சென்றவருடம் செப்ரெம்பர் மாதத்தில் தலாய்லாமாவின் சிரேஷ்ட உதவியாளர் ஒருவர் பெயஜிங் சென்று சீன அதிகாரிகளுடன் உரையாடியுள்ளார்; பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இதற்கிடையில், நேபாளத்தில் நூற்றுக்கும் அதிகமான மதகுருமாரும், மாணவர்களும் தலைநகர் காத்மண்டுவில் உள்ள பௌத்த விகாரையில் சந்தித்து 46ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்தனர். (க-8)

# அணுக்கருவியை ஈரானுக்கு வழங்கியதாக காதிர்கான் மீது பாகிஸ்தான் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,மார்ச்12

பாகிஸ்தான் அணு ஆயுதத் திட்டத்தின் முன்னாள் தலைவர் காதிர்கான் அணு ஆயுதங்களை உற்பத்திசெய்வதற்குத் தேவையான முக்கிய கருவி ஒன்றை ஈரானுக்கு வழங்கியுள்ளார் என பாகிஸ்தான் அதிகாரிகள் குறறஞ்சாட்டியுள்ளனர்.

அணுசக்தி தொடர்பான இரகசியத் தகவல்களை ஈரான், லிபிய மற்றும் வடகொரியா போன்ற நாடுகளுக்கு வழங்கியதை காதிர்கான ஏற்கனவே ஒப்புக்கொண்டபோதும், அணு ஆயுத உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதிலும் ஈடுபட்டிருந்தார் என்பது இப்போது தெரியவந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செண்ட்ரி பியூச் எனப்படும் இந்தக் கருவி யுரேனிய விரிவாக்கலுக்குப் பயன்படுத்தப்படும் பிரதான உபகரணமாகும்.

காதிர்கான் செயற்பாடுகளுடன் பாகிஸ்தான் அரசு எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை என அந்த நாட்டுத் தகவல் துறை அமைச்சர் ஷேக் நஸீத் அஹமட் தெரிவித்தார்.

ஈரானின் அணு ஆயுத உற்பத்தி தொடர்பாகச் சர்வதேச ரீதியில் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ள நிலையிலேயே இந்தத தகவல்கள் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## ஐ.நாவின் குற்றச்சாட்டை ஹெய்ட்டி மறுப்பு

லண்டன்,மார்ச்12

ஹெய்ட்டியில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருவதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தெரிவித்த குற்றச்சாட்டுக்களை - கருத்துக்களை - அந்த நாட்டின் இடைக்கால அரசு மறுத்துள்ளது.

தமது அரசு ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஹெய்ட்டி அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதன்கிழமை 15 நாடுகள் பங்குபற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் "ஹெய்ட்டியில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக" சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு மன்னர் ஹெய்ட்டி அரசு மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் -

அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் - இந்த மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தமது இடைக்கால அரசு எந்தவொரு மனித உரிமை மீறல்களிலும் தொடர்புபட்டிருக்கவில்லை என்றும் -

அவ்வாறான மனித உரிமை மீறல்களைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் - ஹெய்ட்டி அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-8)

உலக அரங்கில்

# உலக வர்த்தக ஸ்தாபனத்தில் ஈரான் இணைய அமெ. ஆதரிக்க வேண்டும்

## ஐரோப்பிய நாடுகள் வேண்டுகோள்

லண்டன்,மார்ச்12

உலக வர்த்தக ஸ்தாபனத்தில் ஈரான் இணைந்துகொள்வதற்கும், விமான உதிரிப்பாகங்கள் அந்த நாட்டுக்கு விற்பனை செய்யப்படுவதற்கும் ஆதரவு தெரிவித்துள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன் போன்ற ஐரோப்பிய சமூக நாடுகள் இந்தத் திட்டத்தில் அமெரிக்காவும் இணைந்துகொள்ளவேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்துள்ளன.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிசா ரைஸ் மெக்ஸிக்கோ சென்ற பின்னர் இந்த விவகாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் -

ஐரோப்பிய நாடுகளின் கருத்துக்களும், அமெரிக்காவின் அபிப்பிராயங்களும் ஒன்றினையும் கட்டத்தை நெருங்கியுள்ளன என்று குறிப்பிட்டார்.

இருந்தபோதிலும், அமெரிக்கா விரும்பினால் ஈராக சம்பந்தமான இந்த இரண்டு நடவடிக்கைகளையும் தடைசெய்ய முடியும்.

உலக வர்த்தக ஸ்தாபனத்தில் ஈரான் இணைந்து கொள்வதற்கும், விமான உதிரிப்பாகங்கள் அந்த நாட்டுக்கு விற்பனைசெய்யப்படுவதற்கும் அனுசரணை வழங்குவதற்குப் பதிலாக, ஈரானின் அணு ஆயுத விவகாரம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

அணுவாயுதத்தை உற்பத்திசெய்யும் சக்தி ஈரானுக்கு உண்டென அமெரிக்கா தெரிவித்து வருகின்ற போதிலும், ஈரானின் அணுசக்தி நடவடிக்கைகள் மின் உற்பத்தியையே இலக்காகக கொண்டுள்ளன என்றும் -

அவை அணுவாயுத உற்பத்திக்கு உபயோகிக்கப்படமாட்டாது என்றும் - ஈரான் தெரிவித துள்ளது.

இதற்கிடையில், ஈரான் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், விமானம் ஒன்றில் பயணம் செய்த 59 ஈரானியப் பிரஜைகள் பிரஸல்ஸ் நகரில் - விமானம் தரையிறங்கிய சமயம் - ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஈரானிலிருந்து இஸ்லாமியத் தலைவர்களை ஐரோப்பிய சமூகம் வெளியேற்ற வேணடும் எனவும் -

அதிகாரத்தில் இருந்து மதத் தலைவர்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் - அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (க-8)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

கொக்குவில், பழைய தபாற்கந்தோர் வீதியில், K.K.S. வீதியில் இருந்து 100 யார் தூரத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.02, வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் - 0773086734.(42927)

## வீடு விற்பனைக்கு

நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் (பொற்பதி வீதி) அமைந்துள்ள புத்தம் புது பொலிவுடன் தரமான வேலைப்பாடுகள் நிறைந்த மூன்று அறைகள், 2 கோல் (Double hall), சாப்பாட்டு அறை அடங்கிய வீடு நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பரராஜசிங்கம் சிவதாஸ், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (42971)

## வாடகைக்கு அறை தேவை

யாழ்.பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளருக்கு (ஆண்) பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளில் அறை வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு: T.P.: 021 - 222 3757, 077 3188378. (42840)

## கார் விற்பனைக்கு

5 ஸ்ரீ XXXX தொடரிலக்கமுடைய Morris Oxford கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ஜெயக்குமார், நாகேஸ்வரி பூங்கா, அல்வாய வடமேற்கு, திக்கம். T.P.: 226 3883 (42949)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுகாதார முறையப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். 1Kg 280/-.தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச்சந்தி, விஜயகுமார், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை T.P.: 222 3529, 222 2867 (42974)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42942)

புறொயிலர், கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. மற்றும் பேட்டுக்குஞ்சு, புறொயிலர் குஞ்சும் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K Farm, பெரிமதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (42980)

தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம செய்யப்பட்டது. 1Kg 180/-, 1Kg 270/- கொள்வனவுக்கு ஏற்ப விலைக்கழிவு உண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (42981)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 170/-. தொடர்பு: 06, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி (கோழி எருவும் பெற்றுக் கொள்ளலாம்). (42976)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 180/-. உயிரோடு நிறை பார்த்து புறொயிலர் கல்பேட் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி, (சுத்தம் செய்தல் இலவசம்) (42985)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

அழகான Pure Bread Dorbbermann Pincher நாய்க்குட்டி ஒன்றும் Gréat Dane நாய்க்குட்டி ஒன்றும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42941)

## திருமண சேவை

இந்து/ கிறிஸ்தவ, உள்நாட்டு/வெளிநாட்டு Doctor, Engineer மற்றும் தராதரமுடைய மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. எமது நிறுவன உறுப்பினர்கள் 12, 13, 14ஆம் திகதிகளில் யாழ்.கிளைக் காரியாலயத்தில் பணியாற்றுவர். விரும்புவோர் விவரங்களுடன் சௌபாக்கியா 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி T.P. 6779 நேரில் தொடர்பு கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கு - கல்யாண மாலை திருமண சேவை, கொழும்பு. T.P.: 338162, Fax 338161. (42957)

டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள், இலிகிதர்கள், சொந்தமாக (கடை) வியாபாரஞ் செய்பவர்கள், லண்டன், கனடா, ஜேர்மனி பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் 1969இல் பிறந்த நோர்வேயால் வந்துள்ள மணமகளுக்கு படித்த மணமகனும் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 286, நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(42979)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0777 - 593722 (42296)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம், 78ஆம் ஆண்டு, பூரம் 3ஆம் பாதம், கனடா P.R. உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். மணமகள் உயரம் 5' 6" தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42937)

கௌரவ குடும்ப, 61ஆம் ஆண்டு, உத்திராடம் 2ஆம் பாதம் 8இல் செவ்வாய் உள்ள விவாகரத்துப் பெற்ற P.R உள்ள கனடா மணமகனுக்கு A/L படித்த மணமகள் தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42939)

கௌரவ குடும்பம், 1970ஆம் ஆண்டு, 7இல் செவ்வாய், பூரம் 2ஆம் பாதம் 119கிரகபாவமுள்ள P.R கனடா மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகன் உயரம் 6 அடி. திருமணம் இங்கு வந்து செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42940)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1965ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம், ஆஸ்திரேலியா சிற்றிசன். விரைவில் இலங்கைக்கு வரவுள்ள மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. போட்டோ, ஜாதகத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும் தொடர்பு: 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். T.P. 6779 அல்லது 338162 (42956)

கௌரவ குடும்பம், 1972ஆம் ஆண்டு மூல நட்சத்திரம் உள்ள டாக்டர் மணமகனுக்கு படித்த, அழகான சிவப்பு மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42936)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பம், 70ஆம் ஆண்டு, மிருகசீரிடம் 3ஆம் பாதம் 8இல் செவ்வாய் உள்ள படித்த மணமகளுக்கு சைவபோசனம் உள்ள உள்நாட்டு அரச உத்தியோகம் அல்லது P.R. உள்ள வெளிநாட்டு மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (42938)

## தவறிவிட்டது

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த வே.முத்துலிங்கம், மு.சுபிஸ்கரன் என்பவர்களது உறுதிபத்திரமானது திருநெல்வேலிச் சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் 10.03.2005 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீதேவி தொலைத்தொடர்பு ஸ்ரான்லி வீதி T.P.: 2059, 5384, சிவா ரேடர்ஸ், ரூபன் களஞ்சியம் திருநெல்வேலிச் சந்தி ஆகிய முகவரிகளில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (42973)

## சுன்னாகம் பட்டின அபிவிருத்தி குறித்த விசேட கூட்டம்

வலி.தெற்கு,மார்ச்12

சுன்னாகம் பட்டின அபிவிருத்தி சம்பந்தமான விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றார்.

பிரதேச சபைச் செயலாளர் மற்றும் வர்த்தகர்கள், சுன்னாகம் பிரதேச அபிவிருத்தியில் அக்கறை யுடையவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இக் கூடடத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் அஞ்சல் அலுவலகத்துக்கான காணி, கட்டடம் ஆகியன குறித்து இக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படவுளளதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-152)

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு,மார்ச்12

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் முழுநாள் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் விளான் புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், கால் நடை வளர்ப்பும் அதன் முக்கியத்துவமும் என்னும் பொருளில் எஸ்.சுப்பிரமணியம் கருத்துரை வழங்குவார். (த-152-204)

## உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு

வலிகாமம் தெற்கு,மார்ச்12

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினரின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை கல்லூரி விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத் தலைவர் கலைபாகர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா, சென்.சாள்ஸ் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி வி.எவ். சின்னத்துரை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (த-152-204)


## யாழ் நகரில் எமது கிளை ஸ்தாபனம்

* வரையறுக்கப்பட்ட ஸ்தாபனங்கள் (Limited Company) ஆரம்பித்து பதிவுசெய்து கொடுத்தல் மற்றும் சேவைகளும், "இன்ரர் கொன்சல்ரன் அன் செக்கறற்றி (பிறைவேற்) லிமிட்டெட்" (Inter Consultant and Secretary (Pvt) Ltd)
* உங்கள் ஸ்தாபனத்தின் புத்தகம் பதிவு செய்தல், இறுதி ஆண்டு கணக்கு (Final Account) தயாரித்தல், வருமானவரி, வற்வரி, சேமலாபநிதி போன்ற விடயங்களும் கொழும்பிலும் செய்து கொடுக்கப்படும்.

"கணக்குப்பார்த்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் சேவைகள்" (Accounting and Consultants Service)

கிளை ஸ்தாபனம்
இல. 174, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 6011201, 077 6544742

தலைமை ஸ்தாபனம்
F 98,Peoples Park Complex,
Pettah.
Colombo- 11
T.P. 2472311, 4712558

(39-21-11-15) (42683)



உ
சிவமயம்
ஓம் ஸ்ரீ ராமகிருஷ்ணா

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் (இலங்கை)
தாவடி, கொக்குவில், யாழ்ப்பாணம்

## குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்திவிழா

இடம்: யா/கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்தியாசாலை
காலம்: இன்று (12-03-2005) சனிக்கிழமை காலை 9.00 மணி
பிரதம விருந்தினர்: ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமி (முதல்வர், வேதாந்தமடம், கந்தர்மடம்)

நிகழ்வுகள்

01. பஜனை
02. 'எழுந்திரு! விழித்துக்கொள்!' கண்காட்சியும் கருத்தரங்கும்
03. சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான கண்காட்சியுடன், ஸ்ரீராமகிருஷ்ணமிசன் வெளியீட்டு புத்தக, திருவுருவப் படங்கள் விற்பனையும் இடம்பெறும்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணி

இடம்: வடமராட்சி கிழக்கு பிரதேசம்
காலம்: 20-03-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
ஏற்பாட்டாளர்: ராமகிருஷ்ண மிசன், கொழும்பு
பிரதம விருந்தினர்: வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன (யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்)
சிறப்பு விருந்தினர்: வைத்திய கலாநிதி ஆர்.சொலமன் (யாழ். தாய், சேய் வைத்திய நலன் அதிகாரி)

இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நல்லாசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஓம் ஸ்தாபகாய ஸ தர்மஸ்ய! ஸர்வதர்ம ஸ்வரூபினே!
அவதாரவரிஷ்டாய! ராமகிருஷ்ணாய தே நமக!

விளம்பர அனுசரணை:
சகலவிதமான நகை வகைகளுக்கும்
பாலகிருஸ்ணா ஆபரண மாளிகை
616, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(42932) (21-11-15)

## அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS
### Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வழங்கப்படும்

## புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாடநெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 5மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

### Advance Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | 4000 | 2000 |
| Diploma in Video Editing | 6000 | 3000 |
| Diploma in Multimedia | 5000 | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

March 31ம் இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 18/03/2005
Batch II - 19/03/2005
Batch III - 26/03/2005
Batch IV - 02/04/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647
(C/41374)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## ஜே.வி.பியை கத்திரிக்க தயாராகிறார் சந்திரிகா

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருக்கிறாரோ இல்லையோ, தனது ஆட்சிக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியுடன் பகைத்துக்கொள்வது - வெட்டி விடுவது - என்பதில் மட்டும் தீர்க்கமாயிருக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஆட்சி அமைப்பதற்காகத் தாம் கூட்டுச்சேர்ந்திருக்கும் அணி, தம்மை அமைதியாக ஆட்சி நடத்துவதற்கு விடமாட்டாது என்ற யதார்த்தம் புரிந்துவிட்டதால் அந்த அணியைச் சீண்டுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்து விட்டார் என்றே தோன்றுகிறது.

'எதையும் எதிர்க்கும் பைத்தியக்காரர்கள்', 'அரசியல் புரியாத மோட்டுக் கழுதைகள்', 'மனநோயாளர்கள்' - என்றெல்லாம் தனது கூட்டு அணியினரைப் பகிரங்கமாகவே நாட்டுத் தலைவி விமர்ச்சிக்கின்றார் என்றால் -

கூட்டு அணியினரான ஜே.வி.பியினரோ, ஜனாதிபதி கத்துமட்டும் கத்திவிட்டுப் போகட்டும்; நாம் செய்வதைச் செய்வோம். தூற்றும்வரை தூற்றுவோம் என்ற பாணியில் தூக்கி எறிந்து நடக்கின்றார்கள்.

நாட்டின் தலைவியும், கூட்டமைப்பு அரசின் தலைவியுமான ஜனாதிபதியின் இத்தகைய பேச்சுக் குறித்து விட்டேத்தியாகப் பதில் சொல்லுகின்றது ஜே.வி.பி.

"கண்ட கண்ட இடங்களில் எல்லாம் ஜனாதிபதி கூறும் கருத்துக்களுக்கெல்லாம் நாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது" - என்று கூறுகின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ஸ.

ஆக, இரு சாரரும் - ஜனாதிபதி தரப்பும், ஜே.வி.பி. தரப்பும் - பொது மேடைகளில் பகிரங்கமாக மாறி, மாறி சேறு வாரிப் பூசிக்கொள்வதில் முனைப்பாக, இருக்கின்றன. சிங்களப் பத்திரிகைகள், ஊடகங்களைப் பார்த்தால் - கேட்டால் - கூட்டமைப்பு அரசின் உள் விட்டுச் சண்டை தினசரி பெரும் நாற்றமெடுத்து மணப்பது அப்பட்டமாகப் புலப்படும்.

கூட்டமைப்புத் தரப்புகள் நேரில் சந்தித்துத் தமக்குள் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கும் காலம் கடத்து விட்டதாகவே தெரிகின்றது. மேடைக்கு மேடை - ஆளாளுக்கு - பதிலடி கொடுத்துத் தூற்றும் கைங்கரியமே இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

ஜே.வி.பியினருடனான உள்முரண்பாடுகளைத் தீர்த்து அரசுக் கூட்டமைப்புக்கள் இணக்க நிலையை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஜே.வி.பி. சார்புப் போக்குடைய அமைச்சர்களான லஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர போன்ற குழுவினர் 'தலையால் கிடங்கு கிண்டுகின்றனர்' ஆனால், உறவு நிலைதான் சுமுகமடைவதாக இல்லை.

வேறுபாடுகளைக் களைந்து, புரிந்துணர்வை வலுப்படுத்துவதற்காக சு.க. தரப்பில் அமைச்சர் கதிர்காமர் கடந்த வாரம் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவைச் சந்தித்து விரிவாகப் பேசினார்.

அந்தச் சந்திப்பில் ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் உறவுப் பாலமாகக் கதிர்காமர் செயற்படுவார் என்றும் -

கருத்து முரண்பாடுகளைக் களைவதற்காக சு.க., ஜே.வி.பி. உயர்மட்டத் தலைவர்கள் இவ்வாறு வாரந்தோறும் தமக்குள் கூடிப் பேசி, பரஸ்பரம் கருத்துப் பரிமாறிக்கொள்வார்கள் என்றும் - தீர்மானிக்கப் பட்டது.

அதன்படிகூட ஜே.வி.பி. தலைவர்களிடையே அடுத்த கட்டம் - சந்திப்பு - நேற்று நடைபெற்றிருக்க வேண்டும். நடைபெறுவதாக இருந்தது. ஆனால், நடக்கவில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அத்தகைய சந்திப்புக்கு ஜனாதிபதி தடை உத்தரவு போட்டுவிட்டமையே சந்திப்பு நடைபெறாமல் போனதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இனிமேல், ஜே.வி.பியுடன் உறவை ஒட்டுப்போடும் முயற்சிக்கோ, பேச்சுக்கோ இடமில்லை என்ற சீற்றத்தில் ஜனாதிபதி குமாரதுங்க இருக்கின்றார் என்றும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அது உண்மையானால் ஜே.வி.பியினரைக் கத்திரிக்க ஜனாதிபதி தயாராகிவிட்டார் என்றே அர்த்தம்.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில், சமாதானத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பது பௌத்த, சிங்கள மேலாண்மை வாதத்தின் ஒட்டுமொத்த வடிவமாக இருக்கும் ஜே.வி.பிதான்.

ஜே.வி.பி. பேரினவாதிகள், ஜனாதிபதி குமாரதுங்கவினால் இந்த அரசிலிருந்து ஓரங்கட்டப்படுவார்களாயின் அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் நகர வாய்ப்பு ஏற்படும் என்று நம்ப முனைகிறார்கள் அமைதி விரும்பிகள்.

அது சாத்தியமாகுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# தமிழ்ப் பெண்களின் முன்னேற்றத்துக்கு சிங்கள இராணுவம் பெரும் தடைக்கல்!

### நீர்வேலிச் சம்பவத்துக்கு பண்பாட்டு மையம் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச்12

தமிழ்ப் பெண்கள் முன்னேற்றகரமான பணிகளைச் செய்வதற்கு ஸ்ரீலங்கா இராணுவம் பெரும் தடைக்கல்லாக இருக்கிறது.

நேற்றுமுன்தினம் நீர்வேலியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் வயோதிபப் பெண் மீது பாலியல் வல்லுறவுக்கு முயற்சித்த சம்பவத்தைக் கண்டித்து பெண்கள் பண்பாட்டு மையம் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நீர்வேலியில் 63 வயதுடைய ஒரு பெண்ணின் மீது பாலியல் வல்லுறவு செய்ய முயற்சித்த சம்பவம் பற்றி அறிந்தோம். இச்சம்பவத்தை நாம் கண்டிக்கிறோம்.

நாம் ஏற்கனவே, மார்ச் 8 சர்வதேச மகளிர் தினத்தில் இராணுவத்துக்கு, ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழ் மண்ணில் குடிமனைகளின் அருகில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது தமிழ்மக்களின் இயல்பு வாழ்விற்கு குறிப்பாக பெண்களின் வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்று அமைதியான முறையில் சொல்லியிருந்தோம்.

இன்று உலகம் முழுவதிலும் பெண்கள் சமூக வாழ்விலும் அரசியலிலும் செயலூக்கமான பங்கு வகிக்கவேண்டும் என்பது சர்வதேச அரங்குகளில் பேசப்படும் விடயம்.

தமிழ்த் தேசியப் போராட்டம் பெண்கள் வெளியே வந்து தமது ஆற்றல்களை வளர்த்துக்கொண்டு சமூக, அரசியல் வாழ்வில் செயலூக்கமான பங்கு வகிப்பதற்கான சாதகமான களநிலைமையை உருவாக்கி இருக்கின்றது.

ஆனால், தமிழ் மண்ணில் சிங்கள இராணுவம் இருப்பது பெண்களின் முன்னேற்றத்திற்கான பணிகளைப் புரிவதற்கு ஒரு பெரும் இடர்தருகின்ற சவாலாக உள்ளது.

இப்போது நீர்வேலியில் நடந்த சம்பவம் மேலும் இதை நிரூபித்துக் காட்டுகிறது. இத்தகைய சம்பவங்கள் மேலும் மேலும் கூடி இனங்களுக்கிடையில் ஒரு மோதல் நிலைமை உருவாகிவிடக்கூடிய விளிம்பு நிலையில் நாம் உள்ளோம்.

எனவே, உடனடியாகத் தமிழர்களின் குடிமனைகளிலிருந்து சிங்கள இராணுவம் விலகவேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம்.

இவ்வாறாக வலியுறுத்தும் ஒரு பெண்கள் இயக்கத்தில் ஆரம்ப விதியாகவே மார்ச் 8 இல் யாழ்ப்பாணத்தில் பெண்கள் பண்பாட்டு மையம் நிகழ்த்திய நிகழ்ச்சி அமைந்திருந்தது. இந்த இயக்கம் பல்கிப் பெருகும். எனவே, சங்கடமான நிலைமைகளைத் தவிர்த்து உடனடியாக இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் இருந்து விலக வேண்டும் - என்றுள்ளது. (கு)

### யாழ்.பல்கலைக்கழகத்தின்

## நுண்கலைத்துறைக்கான மாணவர் தெரிவை ஆட்சேபித்து மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச்12

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறைக்கு பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களுக்கும் இம்முறை இசற்கோர் முறை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதை ஆட்சேபித்தும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடொன்றைச் செய்துள்ளனர்.

இராமநாதன் நுண்கலைத்துறைக்கு விண்ணப்பிப்பதற்கு ஆகக்குறைந்த தகமையாத உயர்தரப் பெறுபேற்றுப் பத்திரத்தில் ஆம் என்ற அடிப்படைத் தகமை இருந்தால் மட்டும் போதுமென்ற நடைமுறை 2003 ஆம் ஆண்டு வரை நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், இந்த வருடம் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு இசற்கோர் அடிப்படையில் மாணவர் கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனால், வழமை போன்று நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்று எதிர்பார்த்திருந்த மாணவர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடனும் உரிய அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்ட போதும் எதுவித ஆக்க பூர்வமான பதில்கள் கிடைக்கவில்லையெனவும், எனவே, இது தொடர்பாக சாதகமான பதில் ஒன்றைப் பெற்றுத் தருமாறும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-13)

## ஊனமுற்ற சிறுவர்களுக்கான தொழிற் சிகிச்சைப் பிரிவு

### யாழ்.ஆஸ்பத்திரியில் விரைவில் தொடங்கும்

யாழ்ப்பாணம், மார்ச்12

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆரம்ப காலத்தில் இருந்து. இது வரையிலும் இல்லாத புதிய சிகிச்சைப் பிரிவொன்று மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஊனமுற்ற சிறுவர்களுக்கான தொழில் வழிச் சிகிச்சை Occupational therapy பிரிவே இப்புதிய பிரிவாகும்.

இச்சிகிச்சை அளிப்பதற்காக நியமிக்கப்பட்ட தொழில் வழிச் சிகிச்சையாளர் இராமலிங்கம் கணேசலிங்கம் கடந்த 5ஆம் திகதி முதல் தமது கடமையை யாழ்.போதனா வைத்தியசாலையில் பொறுப்பேற்றுள்ளார்.

இப்பிரிவை ஆரம்பிப்பதற்கான இட வசதி ஒழுங்குகள் தற்போது அவசர அவசரமாக நிர்வாகத்தால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இன்னும் ஒரு வார காலத்தில் இப்பிரிவு இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறவியில், இடையிட்டு ஊனமுற்ற சிறுவர்களுக்கு இங்கு சிகிச்சை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சிகிச்சையினை அளிக்க வந்துள்ள தொழில் வழிச்சிகிச்சையாளர் நீண்ட காலமாக தென்னிலங்கையிலுள்ள இது சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றினார். இறுதியாக ராகம வைத்தியசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையே இங்கு இடமாற்றப்பட்டுள்ளார். (கு-15)

## மாவின் சில்லறை விலை 30 ரூபாவாக நிர்ணயம்

யாழ்ப்பாணம், மார்ச்12

மக்களின் கோதுமை மா தேவையைக் கருத்திற்கொண்டு மாவின் ஆகக்கூடிய சில்லறை விலையாக 30 ரூபாவை யாழ்.மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நிர்ணயித்துள்ளது.

மாவின் நுகர்ச்சித் தேவையைக் கருத்திற்கொண்டு - அதன் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக - இறக்குமதி செய்த மாவை சமாசம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஆகக்கூடிய சில்லறை விலையாக 30 ரூபா வீதம் விற்கக் கூடிய வகையில் விநியோகித்து வருகிறது. என்று சமாசம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் மேற்குறிப்பிட்ட விலையைப் பின்பற்றுமாறு சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் கேட்டுள்ளார். (கு-204)

## நல்லைக் குருமணியின் குருபூசை நிகழ்வு

நல்லூர், மார்ச்12

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் 24 ஆவது குரு பூசை ஆராதனை விழா எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆதீன குரு மூர்த்தி ஆலயத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு யாகபூசையும் 11 மணிக்கு குருமூர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்திய நாத சுவாமிக்கு சங்காபிஷேகமும் அதைத் தொடர்ந்து 12 மணிக்கு பூசையும் திருமுறை அர்ச்சனையும் கோ பூஜையும் நடைபெறும்.

பாட்டுக் கச்சேரி, பண்ணிசைக் கச்சேரி, இன்னிசைக் கச்சேரி என்பனவும் இடம் பெறும். (கு-111)

### உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும்

## சந்தைகள், நூலகங்கள், வீதிகளின் விவரங்களைத் திரட்டுமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்12

உள்ளூராட்சி சபையின் கீழ் இயங்கும் சந்தைகள், நூலகங்கள், வீதிகள் என்பவற்றின் விவரங்களை உடன் திரட்டுமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

மாகாணத் திட்டமிடல் அமைச்சினால் இந்த விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

மாவட்ட மட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் மேற்படி விவரம் திரட்டுவதற்கான படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

படிவங்களை உடன் பூர்த்தி செய்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வருமானம், வரி சம்பந்தமான தகவல்களையும் பூரணமாகத் திரட்டி அதற்கான படிவத்தை நிரப்பி அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஜ-185-117)

### நாளை

மாசி 29
ஞாயிற்றுக்கிழமை
13.03.2005
திதி : திருதியை
பிற்பகல் 12.24 வரை
நட்சத்திரம் : அச்சுவினி
பின்னிரவு 3.45 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 9.21 - 10.51
ராகுகாலம் : 04.51 - 06.21
(யாவும் பழைய நேரப்படி)

## பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் புதிய ஆயுள்வேத வைத்தியப் பிரிவு

யாழ்ப்பாணம், மார்ச்12

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் புதிய ஆயுள்வேத வைத்தியசாலைப் பிரிவு திறந்து வைக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேசசபை செயலாளர் பி.விக்டர் இதனைத் திறந்து வைப்பார்.

வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கு இரு சித்தமருத்துவப் பட்டதாரிகள் (BSMS) ஆயுள்வேத தொழிலாளி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு பட்டினம் மற்றும் மாதகல் உப அலுவலகப் பிரிவிற்குட்பட்ட மக்கள் இந்த வைத்தியசாலையை முழுமையாகப் பயன்படுத்தலாம் என்று திட்டமிடற் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை -

ஆனைக்கோட்டை உப அலுவலகப் பிரிவில் ஆயுள்வேத வைத்தியசாலைப் பிரிவு முழுமையாக இயங்கிவருகின்றது. (ஜ-185)

### உதயவாக்கு

எவன் தனக்குத்தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ அவனே சுதந்திர மனிதன்.

- மகாத்மா காந்தி




இலங்கை வர்த் தக வங்கி, சுன்னாகம் கிளையில் "அருணலு" சிறுவர் சேமிப் புக் கணக்கு வைத்திருக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவன் செல்வன் சண்முகானந்தன் சந்தோஷன் பாடசாலை மட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாம் இடம்பெற்றமையைப் பாராட்டி வங்கி முகாமையாளர் ஏ.ஆர்.குலேந்திரன் பரிசு வழங்கிக் கௌரவிக்கும்போது எடுக்கப்பட்ட படம். (8-152)



வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் தையல் பயிற்சியில் சித்திபெற்றவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட சுகாதார மேற்பார்வையதிகாரி அ.யோகநாதன் சான்றிதழ் வழங்குவதனையும் அதனை செல்வி மகாதேவன் வளர்மதி பெற்றுக்கொள்வதனையும் படத்தில் காணலாம். (8-185)

# மக்கள் முகம்



அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கடந்த வருடம் (2004) நடத்திய சைவப் புலவர் இறுதியாண்டுப் பரீட்சையில் கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த துரைராசசிங்கம் சடாட்சரசிங்கம் சித்தியடைந்து சைவப்புலவரானார். இவர் பிரபல சமய சமூக சேவையாளரும் சமய சொற்பொழிவாளரும் ஆவார். (8)

★★★



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் 'துவாரகை' உடுவில் தெற்கு, சுன்னாகம் என்னும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தில்லைநாதன் (வயது 80) என்பவர் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

முதுபெரும் சமூக சேவையாளரான செல்லையா தில்லைநாதன் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் ஆவார்.

இவர், தனது வாழ்நாள் முழுவதும் சமய, சமூகத் தொண்டனாகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். கோப்பாய் கிராமச் சங்க அங்கத்தவராகவும் சுன்னாகம் ப.நோ.கூ. சங்க உபதலைவராகவும் வெகுசனஅமைப்புகளின் கூட்டுத் தலைவராகவும் யூரி சபை அங்கத்தவராகவும் சமய நிறுவனங்கள், ஆலய பரிபாலன சபைகளின் தலைவராகவும் திகழ்ந்துள்ளார்.

மானிப்பாய் சுகாதார, சமூக, சுற்றாடல் விவகார சபை அங்கத்தவரான இவர், உடுவில் மத்திய மருந்தக அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும் உடுவில் செஞ்சிலுவைச் சங்கப் போஷகராகவும் பணியாற்றி வருகிறார். (8-90)

★★★



மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் க.இராஜேந்திரன் சுகாதாரத் திணைக்களத்தில் தனது 50 ஆண்டுகள் சேவையைப் பூர்த்திசெய்து இம்மாதத்திலிருந்து சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார்.

இவர், ஆரம்பத்தில் யானைக்கால் நோய்த்தடைப் பகுதியில் சேவை செய்கையில் களுத்துறை, மாத்தறை ஆகிய இடங்களில் உப ஆய்வு கூடங்களை ஆரம்பித்து வைத்தார். அத்துடன், யானைக்கால் நோய் நுண் புழுக்கள் சம்பந்தமாக வீடுகளில் வளர்க்கும் பிராணிகளில் ஆய்வுகளை மேற்கொண்டு புதிய நுண்புழுவைக் கண்டுபிடித்து இது வெளிநாட்டு மருத்துவச் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இரத்தப் பரிமாற்றுச் சேவையில் கடமையாற்றிய இவர், யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இவர், அங்கு சிரேஷ்ட மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராகச் சேவை செய்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் சேவைசெய்தபோது எய்ட்ஸ் சம்பந்தமான ஆய்வுகூடத்தை ஆரம்பிக்கப்பாடுபட்டவர். (8-15)

# சேவை உணர்வில் பாராட்டுப் பெற்றவர்

## நீத்தார் நயப்புரை

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த பிரபல்யம் மிக்க குடும்பத்தில் பிறந்த டாக்டர் இ. திருநாவுக்கரசு லண்டனில் 2004.10.29 அன்று சிவபதமடைந்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்த மண்ணான நல்லூரில் இலங்கை புகையிரத சேவையில் உயர் பதவி வகித்த இரத்தினசபாபதி கனகசவுந்தரியின் சிரேஷ்ட புதல்வர் ஆவார். டாக்டர் திருநாவுக்கரசு தனது கல்வியைக் கொழும்பு சென்.பீற்றேஸ் கல்லூரியில் பயின்றார். சென்.பீற்றேஸ் கல்லூரியில் பயின்று அக்கல்லூரியின் மூலம் பல்கலைக்கழகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல்கலைக்கழகத்தில் சிறந்து விளங்கி எம்.பி.பி. எஸ். பட்டம் பெற்றார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று விளங்கிய அவர், இலங்கையின் பல பாகங்களிலும் பல வைத்தியசாலைகளில் கடமை புரிந்தார். குறிப்பாக, பதுளை, குருநாகல், புத்தளம், சிலாபம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கடமையாற்றினார். யாழ்ப்பாணத்தில் கடைசியாகக் கடமைபுரிந்தார். பின்னர், 1977ஆம் ஆண்டு இளைப்பாறி லண்டனிலும் பல பாகங்களிலும் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

சமயப் பற்றும், சமூக சேவையிலும் முன்னின்று உழைத்த டாக்டர் திருநாவுக்கரசு கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் பக்தரான திரு.இராஜேந்திரன் தம்பதிகளின் ஏக புதல்வி சரஸ்வதியைத் திருமணம் செய்து கொழும்புத்துறையில் வாழ்ந்துவந்தார். யோகர் சுவாமிகளின் அருள் ஆசிபெற்ற திருநாவுக்கரசு தம்பதிகளுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். இலங்கைத் திருநாட்டிலும் லண்டனிலும் இவரின் அன்பையும் சேவையையும் பாராட்டாதவர்கள் இல்லை.

மறைந்த டாக்டர் திருநாவுக்கரசுவின் இறுதிக்கிரியையில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கு பற்றினார்.

அன்னாரின் ஆத்மா சந்தியடைய நல்லைக் கந்தனைப் பிரார்த்திப்போமாக.

- நண்பன்.

# ஒப்பிட்டுப் பேசுதலைத் தவிர்க்க!

## தவக்காலச் சிந்தனை

ஒப்பிட்டுப் பேசுதல் என்பது மனித வாழ்வில் தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும. ஒவ்வொரு மனிதரும் இன்னொரு மனிதரில் இருந்து மனதாலும் குணத்தாலும் வேறுபட்டவராக³ இருக்கின்றார்கள். தனித்தன்மை வாய்ந்தவர்களாக வாழ்கின்றார்கள். அதை நாம் மதிக்கவேண்டும். அதை மதிக்கத் தவறும் போது பலர் புண்படுத்தலுக்கு ஆளாகின்றார்கள். சில குடும்பங்களில் கணவன் - மனைவிக்கிடையே பிரச்சினைகள் தோன்றுவதற்கு மிகமுக்கிய காரணமாக இந்த ஒப்பிட்டுப் பேசுதல் முதன்மை வகிக்கின்றது. தன் கணவனையும் அயல்வீட்டுக் கனவானையும் ஒப்பிட்டுக் கணவனுடன் முரண்படும்போது அங்கே தேவையற்ற சந்தேகம் எழுந்து, குடும்பமே சின்னாபின்னமாகச் சிதைந்து விடுகின்றது. பிள்ளைகளைப் பெற்றோர் கண்டிக்கும்போது வேறொருவரைச் சுட்டிக்காட்டி ஒப்பிட்டு பேசிக் கண்டிக்கும் போது கூனிக்குறுகிப் போகின்றார்கள். இதனால், பிள்ளைகள் மனம் கடினப்பட்டு மாற்று வழிகளைத் தேடி ஓடும் நிலைமை ஏற்படுகின்றது. எனவே, நாம் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பேசுவதைத் தவிர்த்து, அவர்களை அவர்களாவே ஏற்று வாழ இறைவனிடம் வரம் வேண்டுவோம்.

32ஆம் நாள்

- குணா.

# நூல் வரிசை




நூல் : நேசமலர் (நினைவு மலர்)
மலர் அமைப்பு : சங்கரத்தையூர் சபாநாதன்

நிலையில்லா இந்த மானிடப்பிறவி எடுத்து இவ்வுலகில் வாழ்வாங்கு வானுறையும் தெய்வங்களாகிவிட்ட திருநாவுக்கரசு - நேசமலர் தம்பதிகளின் நினைவாக வெளியிடப்பட்ட இந்நூல், அவர்களின் நினைவைப் பிரதிபலிக்கும் சான்றுகளை மட்டுமன்றி, இந்தப் பூமியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மானிட வர்க்கம் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகளையும் தன்னகத்தே கொண்டு வெளிவந்திருக்கின்றது.

எங்கள் குலமாதாவாகிய கோமாதா பற்றிய விடயங்கள் நூலில் கணிசமான பகுதியைப் பிடித்துள்ளது. கோமாதாவின் அழகிய கலர்ப்படம் போடப்பட்டு, அதிலே கோமாதாவில் உறைந்திருக்கின்ற தெய்வங்கள் கொண்ட படம் நூலை மேலும் மெருகூட்டுகின்றது. கோமாதா பற்றிய அறிவூட்டும் மகா வாக்கியங்களையும் திருமூலர், சண்டேஸ்வரர், ஆனாயநாயனார், மனுநீதிகண்டசோழன், ஞானப்பிரகாசமுனிவர் ஆகியோருக்கும் பசுவுக்கும் உள்ள தொடர்பு பற்றிச் சிறுசிறு தலைப்புகளில் இடப்பட்டுள்ளது. பல்கலைப் புலவர் க.சி.குலரத்தினத்தின் 'பசுவின் பெருமை' என்ற ஆக்கமும் சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் 'பசு காக்கும் முறை' என்ற ஆக்கமும் ஸ்ரீமத் முத்துகுமாரசுவாமித் தம்பிரானின் 'கோதனம்' என்ற ஆக்கமும் அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் 'கபிலபூசை' என்ற ஆக்கமும் மணிமேகலையில் ஆபுத்திரன் திறம் அறிவித்த காதையில் இருந்து பிரசுரிக்கப்பட்ட 'நோவன செய்யன்மின்' என்ற ஆக்கமும் கோமாதா பற்றிய அறிவினை மேலும் விருத்திசெய்ய உதவுவனவாய் அமைந்துள்ளன.

ஆகவே, இறந்த எம் மூதாதையருக்கு ஞாபகார்த்தமாக வெளியிடப்படுகின்ற நூல்களில் தேவையற்ற விடயங்களை வெளியிடுவதை விடுத்து சில பயனுள்ள - சமுதாயத்திற்கு உதவக்கூடிய - இவ்வாறான விடயங்கள் வெளிவருவது நூலுக்கும் சமுதாயத்திற்கும் சிறப்பைக் கொடுக்கும்.

- தெல்லியூர் சி.ஹரிகரன்.




நூல் : சுகணாவின் அமுதவிழா மலர்
ஆசிரியர் : மலர்க்குழு

கடலுக்குப் பெருமை 'கோடிக் கணக்கில் கிடக்கின்ற நுரைகளால் அல்ல. ஆழத்தில் அடங்கிக் கிடக்கும் முத்துக்களால் தாம் என்று அறிமுகவுரையுடன் ஆரம்பிக்கின்றது சுகணாவின் அமுதவிழா மலர்.

தமிழறிஞர் சுகணாவின் 80ஆவது பிறந்த தின மலராக வெளியிடப்பட்டுள்ள இம்மலரின் தனித்தன்மை, சுகணாவைப் பற்றிய பிற அறிஞர்களின் கட்டுரைகளுக்குப் பதிலாக அவரது ஆக்கங்களின் தொகுப்பு இடம்பெற்றுள்ளமையே. குறிப்பாக, இம்மலரில் சுகணாவின் பத்துத் திருமுகங்கள் இடம்பெற்றுள்ளது. இக்கடிதங்கள் இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியில் சுகணாவால் அவரது மகளுக்கு எழுதப்பட்டவை. சமூக சீர்திருத்தப் பார்வையில் எழுதப்பட்ட இக்கடிதங்கள் இம்மலரில் இடம்பெற்றது அவரின் வாழ்வின் மகத்துவத்தைப் படம்பிடித்துக்காட்டுகின்றது.

சுகணாவின் அமுதவிழா மலரை க.தமிழ்அழகன், ச.பூங்கோதை, பா.தமிழ்மலர், செ.மணிமேகலை, ப.கனிமொழி, க.கணேசானந்தன் ஆகியோர் வெளியிடுகின்றனர்.

இந்த மலரில் தமிழறிஞரின் கட்டுரைகளும் சிறுகதைகளும் காணப்படுகின்றன.

சுகணாவின் படத்தை அட்டைப் படமாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள இந்த மலரினுள்ளே சுகணா தம்பதிகளின் நிழற்படமும் காணப்படுகின்றது.

சுகணா தனது மகளுக்காக எழுதிய ஒவ்வொரு கடிதமும் அனைவரும் படிக்கக்கூடிய வகையிலேயே அமையப்பெற்றுள்ளன. அவர் தனது மகளை மட்டும் கருத்திற் கொள்ளாது உலகில் உள்ள அனைத்துப் பெண்களையும் தனது மகளாகக் கொண்டு எழுதிய கடிதங்கள் தற்போது நூல் உருப்பெற்றுள்ளன.

- கங்கா.




நூல் : புலரி
ஆசிரியர் : க.குகபரன்
வெளியீடு : 'புலரி' சித்தன்கேணி.

கலை - இலக்கிய - சமூக ஏடான புலரி காலாண்டிதழ் - 02 வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் குமரகுருபரனின் உருவாக்கத்தில் சித்தன்கேணி 'புலரி'யினால் இவ்விதழ் வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டாவது இதழான புலரியின் உள்ளே நேர்காணல், கவிதைகள், சிறுகதை, கட்டுரைகள் என்பன காணப்படுகின்றன.

பேராசிரியர் அ.சண்முகதாசுடனான நேர்காணல், சோ.பத்மநாதன், ஜெ.கி.ஜெயசீலன், துரைகணேசமூர்த்தி, நவராஜ், ரஜனி ஆகியோரின் கவிதைகள் தொல்புரம் சி.கதிர்காமநாதனின் சிறுகதை, கலாநிதி ம.இரகுநாதன், குமரன், அ.குமாரவேல், துணைவியூரான் சிறீபவன், துளசி, தவராணி, குகபரன் ஆகியோரின் கட்டுரைகள் என்பன புலரியினுள் பூத்துள்ளன.

ஏழைகள் அவள் எழுதிய கவிதை, வெறிபிடித்த சுனாமியை வெற்றிகொள்வோம், துயர்க்காலம், என்ன செய்யப்போகிறோம், சுனாமி ஒப்பாரி, லொட்ஜ் மங்கையிவள் போன்ற பல தலைப்பிலான கவிதைத் துளிகளும் -

ஈழத்துத் தமிழ் நாவல்களில் தமிழ்த்தேசிய உணர்வின் வெளிப்பாடுகள், நாட்டுப்புறவியல் கதைப் பாடல், 'ஈ' மயப்பட்டு வரும் உலகும் புதிதாய் உருவாகும் 'ஈ வைவ்' வும், சமஷ்டி முறையின் பண்புகள், பாரதியும் வசன கவிதையும், பசி போன்ற பல தலைப்புகளை உள்ளடக்கிய கட்டுரைகளும் இந்தப் புலரி இதழினுள் உள்ளன.

அனைவரும் படிக்கத்தக்க ஒரு இதழாகவும் சிந்திக்கவைக்கும் விடயங்களை உள்ளடக்கிய இதழாகவும் இந்தப் 'புலரி' வெளிந்துகொண்டிருக்கின்றது.

- கவிதரன்.

# தமிழ் மொழியே தமிழ் இனத்தின் அடையாளம் அதை அழியவிட்டால் போராட்டம் எதற்காக?

இங்கு உரையாற்றிய வண.பிதா பிரான ஸிஸ் யோசப் அடிகள், நானும், இளங்குமரனும் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கள் எனக்கூறினார். என்னைப் பொறுத்த வரையில் எனக்குத் தமிழில் அப்படி பாண்டித்தியம் ஏதும் கிடையாது.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தமிழை ஒருபாடமாகக் கற்றுக்கொண்டேனே தவிர தமிழில் பாண்டித்தியம் கிடையாது. இப்போது கூடப் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இடம் பெயர்ந்து இங்கு வந்த பிறகு கூட பண்டிதர் பரந்தாமனிடம் தமிழ் மொழியில் உள்ள பல ஐயங்களைக் கேட்டுத் தெளிந்துகொண்டிருக்கிறேன். இன்னும் முழுமையாகத் தெரியாது.

எமது மொழி அழிந்து கொண்டிருக்கிறது என்பதை, சகலரும் கருத்தில் கொள்ள வேண்டும். நாள்தோறும் எங்கள் மொழி அழிந்து கொண்டிருக்கின்றது இது மிகவும் வருத்தத்திற்குரிய விடயம்.

ஓரினத்தின் உயிராய் அமைவது மொழி என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழர் என்று அழைக்கப்படுகின்றோம். தமிழ் மொழியைப் பேசுகின்ற காரணத்தால், தமிழர் என அழைக்கப்படுகின்றோம் இந்த மொழி அழிந்து விடுமானால் நாங்கள் தமிழர் அல்லாதவர்கள் ஆகிவிடுவோம். இந்த விடுதலைப் போராட்டம் பயனற்றுப் போய்விடும்.

ஆயிரக்கணக்கான போராளிகள் இந்த மண்ணின் விடுதலைக்காக மாண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் செத்திருக்கிறார்கள். பலகோடி ரூபா இழப்புக்கள் போரினால் மற்றும் பல்வேறு காரணங்களால் இந்த விடுதலைப் போராட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன. இவையெல்லாம் - இந்தத் தியாகங்கள் எல்லாம் - வீணாகிப்போய்விடும்.

நாங்கள் படிக்கும் காலத்தில் தமிழ்மொழியில் மட்டும் மொழியைப் பற்றிப் பார்ப்பதில்லை. மற்றைய பாடங்களிலும் மொழி எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது பார்ப்பார்கள். அந்த நிலை இன்று இல்லை. அந்தக்கருத்து மாறி விடயம் தெரிந்தால் போதும் மொழி எவ்வாறு இருந்தாலும் பரவாயில்லை என்று வந்துவிட்டது.

மொழி என்பது ஒருவர் தனது எண்ணத்தை அல்லது கருத்தை மற்றொருவருக்கு வெளிப்படுத்துகின்ற கருவிதான். மொழி சிறப்பாக இலலையானால் கருத்தை வெளிப்படுத்த முடியாது.

நாளேடுகளில் தவறான செய்திகள் வருகின்றன விளங்கிக்கொள்ள முடியாத செய்திகள் வருகின்றன மொழியை அழிவில் இருந்து காப்பதற்குப் பெரும் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

அண்மையில் திட்டம் ஒன்றை வகுத்தோம். எமது இயக்க உறுப்பினர்கள் 300 பேருக்கும் பள்ளிப்பிள்ளைகள் 300 பேருக்கும் எமது நிறுவனங்களில் பணியாற்றும் 150 பேருக்குமாக 750 பேருக்குக் கல்வி கற்பிக்க தமிழ் ஆசிரியர்கள் ஐவரைத் தேர்ந்தெடுக்க முயற்சித்தோம். அதில் தோற்றுவிட்டோம்.

ஒழுங்காகத் தமிழைக் கற்பிக்கக் கூடிய தமிழாசிரியர்கள் ஐவரைத் தேர்ந்தெடுக்க முடியாத அவல நிலையிலேயே நாங்கள் இப்போது இருக்கின்றோம்.

அதன் பின்னர் தமிழாசிரியர்களை உருவாக்கும் பணியைத் தொடங்கியிருக்கிறோம். அதற்கு ஒரு முயற்சி செய்தோம் ஜி.ச.ஈ. உயர்தர வகுப்பில் தமிழில் தேறிய மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தமிழைக் கற்பித்து அவர்கள் ஊடாக அந்தப்பணியை மேற்கொள்ள முயற்சிசெய்தோம்.

இதற்கு 190 வேண்டுகைகள் வந்தன. 158 பேரைத் தேர்வுக்கு அழைத்தோம் 110 பேர் தேர்வு எழுதினார்கள். அந்தத் தேர்வில் ஆகக் கூடுதலாகப் பெறப்பட்ட புள்ளி 47 தான். இந்தத் தேர்வில் கட்டுரை கொண்ட வினாத்தாள் வழங்கப்படவில்லை. ஒருவரி விடை கொண்டவை. எல்லாம் ஒரேவரி விடை.



செ.தமிழேந்தி

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 50ஆவது அகவையை ஒட்டி விடுதலைப் புலிகள் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் வகுப்பறை மண்டபம் ஒன்றை அமைத்திருந்தனர். அந்த மண்டபத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் வைபவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் தமிழீழ நிதிப்பொறுப்பாளர் செ.தமிழேந்தி ஆற்றிய உரையின் தொகுப்பு இது...

கேள்விகளுக்கு அந்தத் தாளிலேயே விடை எழுத வேண்டும். நாள்தோறும் நாங்கள் விடுகின்ற தவறுகள் தொடர்பாகப் 15 கேள்விகளைப் போட்டோம். அந்த வினாக்களுக்கே பலரும் விடையளிக்கவில்லை. 15 வினாக்களில் 3,4 புள்ளிகளைத் தான் பலர் பெற்றிருந்தார்கள்.

### பத்திரிகைகளில் மொழித்தவறுகள்

பன்மை, எழுவாய் இருக்கும் செயனிலை ஒருமையில் முடியும். இப்படிப் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இன்றைய நாளேடுகளில் கூட சில தவறுகளைக் குறிப்பு எடுத்தேன். நாளேடுகளில் வரும் செய்திகளில் தவறுகளைப் பார்த்தேன். செய்தி பிழையல்ல, மொழிப்பிழை. தவறாகவரும் செய்திகளைகோடிட்டு வைத்திருக்கிறேன். ஏனெனில், எங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதற்காகச் சேர்க்கிறேன்.

அணமையில், நாளேடு ஒன்றில் செய்தி ஒன்று வந்திருந்தது 'பலவீனமான இந்தியாவின் ராஜதந்திரம்' என்ற தலைப்பில் அச்செய்தி வந்திருந்தது. அந்த நாளேட்டின் தலைப்புச் செய்தி. இலக்கணத்தவறு ஒன்றும் இல்லை. பொருள் முற்றுமுழுதாகப் பிழை.

இந்தியா பலவீனமான நாடு அல்ல. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அது ஒரு வலுவான நாடு. உலகில் நான்காவது வல்லரசு என்று கூறுகிறார்கள். வளரும் நாடு. கணனித்துறையில், மென் பொருள் உற்பத்தியில் உலகில் இரண்டாம் இடத்தில் இந்தியா நிற்கின்றது. அந்தளவுக்கு வளர்ச்சியுள்ள நாடு.

அண்மைக்காலத்தில் ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தார்கள். 2 ஆயிரத்து 20ஆம் ஆண்டில் இந்தியாவும் சீனாவும் அமெரிக்காவை விஞ்சி விடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அளவுக்கு அந்த நாடுகள் வளர்ந்துகொண்டிருக்கின்றது.

ஆனால், அந்தச் செய்தியில் 'பலவீனமான இந்தியா' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் பலவீனமான ராஜதந்திரம் என்று எழுதுவதற்குப் பதிலாக அந்த அடைமொழியை இநதியாவுக்கு முன்னால் போட்டு விட்டார்கள்.

எமது பிரச்சினை தொடர்பாகத்தான் அந்தச் செய்தி வந்தது. இந்தியாவின் ராஜதந்திரம் பலவீனமாக இருக்கிறது. அமெரிக்கா இங்கு தனது செல்வாக்கைக் கூட்டிக்கொண்டு போகின்றது என்பது தொடர்பாகவே அச்செய்தி அமைந்திருக்கிறது.

இப்படித்தான் மொழியைப் பயன்பயன்படுத்துகின்றோம். இப்படி எழுதும் போது கருத்து மயக்கம் வருமா? வராதா? கண்டிப்பாக வரும்.

இந்தியாவைப் பற்றி எதுவும் அறியாதவர்கள் அதை வாசித்துவிட்டுப்போவர்.

இப்படித்தான் எமது மொழி நாள்தோறும் சீரழிந்து கொண்டுபோகின்றது. அழித்துக் கொண்டேயிருக்கின்றோம். இந்த நிலையில் இருந்து எமது மொழியை மீட்டெடுக்கவேண்டும். இங்கேயிருக்கக் கூடிய தமிழாசிரியர்களைப் பரிவோடு வேண்டுகின்றேன். கற்பிக்கும் போது குழந்தைகளுக்குச் சீராகக் கற்பியுங்கள்.

எமது மொழியைக் கற்றுக்கொண்டு கற்பிக்கவேண்டும். அதைத்தான் பணிவாக வேண்டுகிறேன்.

மற்றைய பாடங்களிலும் எமது பிள்ளைகள் சிறக்கவேண்டும். அறிவியலில் எமது மக்களின் குழந்தைகள் மிகச் சிறந்த ஆற்றலுடையவர்களாக வரவேண்டும். வணிகத்தில் எல்லாத துறைகளிலும் எமது மக்கள் சிறக்க வேண்டும்.

அதேவேளை, எமது மொழியை அழியாமல் காப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும், எல்லாத்தரப்பினராலும் எடுக்கப்படவேண்டும். குறிப்பாக ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாதது. மொழி அழிந்து போகுமானால், நாங்களும் அழிந்து போவோம்.

சிங்கள அரசு, தமிழரை இந்தமண்ணில் அழிபபதற்குப் [illegible]வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இனப்படுகொலை மூலம் எங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். எமது மண்ணில் எவ்வளவு இனப்படுகொலைகள் நடந்தன என்பது உங்களுக்குத் தெரியும். அந்த இனப்படுகொலை காரணமாகத்தான், இந்த விடுதலைப் போராட்டம் தொடங்கியது என்பது உங்களுக்குத் தெரியும.

ஒன்று எமதுமொழி. மொழிவழிப் போராட்டமாகத் தொடங்கியது. 56ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வந்ததை எதிர்த்து, மொழிவழிப் போராட்டமாகத் தொடங்கியது. பின்னர் இன அழிவுக்கு எதிரான விடுதலைப் போராட்டமாக முகிழ்ந்தது. எமது தலைவரின் தலைமையில்.

58ஆம் ஆண்டுக் கலவரம், 77ஆம் ஆண்டுக் கலவரம், 83ஆம் ஆண்டுக் கலவரம், 81 ஆம் ஆண்டுக் கலவரம் இவற்றைவிட எங்கள் மண்ணிலேயே சிங்கள இராணுவம் நூற்றுக் கணக்கான மக்களைப் படுகொலை செய்திருக்கின்றது. தொகை தொகையாகப் பல இடங்களில் கொன்றது. இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் பல்லாயிரம் பேர்.

கொக்கட்டிச் சோலையில் நடந்த கொடுரத்தைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். வல்வெட்டிதுறையில் நூலகம் ஒன்றுக்குள் எமது மக்களைப் பூட்டிவைத்துவிட்டுக் குண்டுவைத்து தகர்த்தமை குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது ஒரு வகை அழிப்பு.

இன்னொரு வகையாக, போரைச் சாட்டாக

**தொகுப்பு: குகா**

வைத்துக்கொண்டு மக்களை அழித்துக் கொண்டு இருக்கிறார்கள். பொருளாதாரத் தடை மூலம் எமது மக்களை அழித்துக்கொண்டிருக்கிறார்கள். கல்வி மூலம் அழித்துக்கொண்டிருககிறார்கள்.

### தரப்படுத்தலை அன்று எதிர்த்தோம்

ஒரு காலத்தில் தரப்படுத்தல் வந்தபோது அதை எதிர்த்தோம் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்கள் அதனை எதிர்த்தனர். இன்று தரப்படுத்தல் இல்லையென்றால் தமிழர் பல்கலைக் கழகம் போக முடியாத சூழல். தரப்படுத்தலை ஸ்ரீலங்கா அரசு நிறுத்தப்போகின்றது. மீண்டும் அவர்கள் தகுதி அடிப்படையிலான பல்கலைக கழக அனுமதியைக் கொண்டுவரப் போகின்றார்கள். 71ஆம் ஆண்டு தரப்படுத்தல் கொண்டு வரப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை 34 ஆண்டுகள். இந்த 34 ஆண்டுகளில் சிறப்பாகத் திட்டமிட்டு தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் கூடுதல் கவனஞ்செலுத்தி, மிகச் சிறந்த வளர்ச்சி ஒன்றை உருவாக்கிவிட்டார்கள். இப்போது அவர்களுக்குத் தரப்படுத்தல் தேவையில்லை. தரப்படுத்தல் நீக்கப்படும் போது முற்றாகத் தமிழர்கள்தான் பாதிக்கப்படுவார்கள்.

தமிழர்களை எந்தெந்த வகையில் ஒடுக்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் ஒடுக்குவதற்கு நடவடிக்கைகளை சிங்கள அரசு செய்து கொண்டிருக்கின்றது.

யாழ் மாவட்டத்தில் கடந்த ஆண்டோ, அதற்கு முதல் ஆண்டோதெரியவில்லை. தகுதி அடிப்படையில் ஒரு மாணவன் மட்டும்தான் அனுமதி பெற்றார் என்று தகவல்கள் கூறுகின்றன. மற்றைய அனுமதிகள் மாவட்ட அடிப்படையிலான தரப்படுத்தலுக்கு ஊடாகவே நடக்கின்றன.

(வளரும்)

## சமஷ்டி முறை அதிகாரப் பகிர்வு ஊடாக பதவியைத் தக்கவைக்க ஜனாதிபதி முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறார் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு,மார்ச்12

இனப்பிரச்சினைத் தீர்வுக்குச் சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காணமுடியும் எனக் கூறும் ஜனாதிபதி சந்திரிகா, அதற்கு ஊடாகத் தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் திட்டமொன்றைத் தீட்டியிருக்கின்றார். சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கத்திற்கு ஐ.தே.கட்சி ஆதரவு தரும். ஆனால், அதற்கூடாக ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பலப்படுத்தவோ, தக்க வைத்துக்கொள்ளவோ ஐ.தே.கட்சி ஒத்துழைக்காது. இந்த விவகாரத்தில் ஆளுங்கட்சிக்குள் கருத்தொற்றுமை இல்லாமை மேலும் சந்தேகத்தையே தருகிறது.

- இவ்வாறு கூறினார் முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. பேச்சாளருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஜனாதிபதி ஆட்சி முறையைப் பற்றிப் பேசாமல் இருந்துவிட்டு இன்று தனது பதவிக்காலம் முடியும் தறுவாயில் இந்த ஜனாதிபதி ஆட்சியினால் எமது நாட்டில் பிரச்சினைகள் தோன்றுகின்றன என்று சொல்லி மக்களை ஏமாற்ற நினைக்கிறார் சந்திரிகா. இது அவரின் அதிகார ஆசையை எடுத்துக்காட்டுகிறது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னர், பொது மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம், அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்குவோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு! பொய் வாய்குறுதியை வழங்கியது. இன்று அந்த வாக்குறுதிகளைக் கண்டும் காணாதது போல இருக்கின்றது அரசு.

தனது அரசிற்குள் இருக்கும் கூட்டுக்கட்சிகளே சமஷ்டி முறையிலான தீர்வுக்கு எதிராக இருக்கின்றபொழுது ஜனாதிபதி எப்படி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்போகிறார்?

தான் இன்னும் எத்தனை வருடங்கள் அதிகாரத்தில் நீடிக்கமுடியும், அதில் மக்களை எப்படி ஏமாற்றுவது என்பதே ஜனாதிபதியின் சிந்தனை. இவற்றையெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது - என்றார் அவர்.

(க-3)

## பளையில் சமாதானச் சிலுவை யாத்திரை

தென்மராட்சி,மார்ச்12

பளைப் பிரதேச மக்களின் சமாதான சிலுவைப் பாதயாத்திரை நாளை நடைபெறும்.

புலோப்பளை புனித இராயப்பர் தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரை அல்லிப்பளை, கிளாலிநகர் புனித மைக்கேல் தேவாலயம் வரை செலலும்.

தேவாலய உதவிப் பங்குத் தந்தை அருட்திரு வசந்தசீலன் அடிகள் தலைமையில் இந்தச் சிலுவைப் பாதையாத்திரை நடைபெறும்.

கடந்த வருடமும் பிரதேச மக்களால் கடைக்காடு புனித அந்தோனியார் தேவாலயம் வரை சமாதான சிலுவைப் பாதயாத்திரை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(3-117)

## விமான சேவை

**யாழ்ப்பாணம் -> கொழும்பு -> யாழ்ப்பாணம்**

உங்கள் விரைவான பயணத்திற்கு சகல விமானத்திற்குமான பயணச்சீட்டுக்களை 24 மணி நேரமும எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சந்து ரவல்ஸ்,
புதிய உயர் கல்லூரி வளாகம்,
95, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P.: 021 - 222 3208
077 3151358
077 3144762 (42900)(46-45-15)


உ
சிவமயம்



*உசன் மிருசுவில்*

ஸ்ரீகந்தசுவாமி கோயில்

## 1008 கலச அபிஷேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா

ஆரம்பம்: 12.03.2005 சனிக்கிழமை
பூர்த்தி: 13.03.2005 ஞாயிற்றுக்கிழமை

அருள்வாக்குச் சித்தர்

**குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள்**

தலைமையில் பல சிவாச்சாரியர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.


விளம்பர அனுசரணை:

**ATLAS TELECOM MOBILE LANKA**

Mobitel AUTHORIZED DEALER FOR

No. 412, Hospital Road, Jaffna.
T.P.: 222 2031, 222 2032 (42830)(42-46-45-15)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1937 - 04 - 11 |  | 2005 - 02 - 09 |

அமரர் **தம்பு மகாலிங்கம்**

மனிதருள் மாணிக்கமாய் பாசத்துடன் வாழ்ந்தீர்
இனிய உமது முகத்தை எப்போது நாம் காண்போம்?
ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து சகலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (12-03-2005) சனிக்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சேச் வீதி,
உடுப்பிட்டி. (42923)(46-45-15)

**குடும்பத்தினர்.**

## சிறப்புற நடைபெற்ற மகளிர் தின நிகழ்வு

கரவெட்டி,மார்ச்.12

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயக் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மகளிர் தினவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

செல்வி ச.கோகுலராதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் ஆகியோர் பொதுச்சுடர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மாவீர மாலதியின் உருவப்படத்திற்கு அவரின் சகோதரியான மேரி வினோஜா ஈகைச்சுடர் ஏற்றி மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாசின் சிறப்புரையும் வேழினி வல்லிபுரத்தின் கருத்துப் பரிமாற்றமும் இடம் பெற்றன.

இதனையடுத்து மகளிர் உரிமை பற்றிய சலனப்படம் காண்பிக்கப்பட்டது. (எ-70-203)

## வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

கைதடி,மார்ச்12

வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக்குழுக்கூட்டமும் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முறையே காலை 10.30 மணிக்கும் நண்பகல் 12மணிக்கும் வேலணை உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இக்கூட்டத்தில் வேலணைப் பிரதேச செயலகத்தின் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் பற்றி ஆராயப்படவிருப்பதனால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (எ-75)

## வறிய மாணவர்களுக்கு கணக்குப் புத்தகங்கள்

கைதடி,மார்ச்12

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது உறவுகளை இழந்த மருதங்கேணி அரசினர் தமிழ்கலவன் பாடசாலையைச் சேர்ந்த 21 வறிய மாணவர்களுக்குத் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்ட சேமிப்புப் புத்தகங்கள் வழங்கும் நிகழவு அண்மையில் இடம்பெற்றது.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் தலா ஐயாயிரம் ரூபா வீதம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்டு அதற்குரிய வங்கிக்கணக்குப் புத்தகங்கள் உரிய மாணவர்களிடம் நேரடியாகக் கையளிக்கப் பட்டன.

மேற்படி வைப்பிலிடப்பட்ட ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாவும் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினால் சேகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-75)



## நீங்காத நினைவின் 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி தேவகுமாரி சிவபாதம்

தொழில் நுட்பவியலாளர் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம்

12.03.2005 (நயப்புரை)

*விவசாய பீடாதிபதியின் உள்ளத்திலிருந்து......*

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் – வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஒப்ப இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் அமரர் திருமதி தேவகுமாரி சிவபாதம். எமது விவசாய பீடமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே தொழில்நுட்ப அலுவலராகக் கடமையாற்றியவர்.

இவர் அன்புள்ளவராய், பண்புள்ளவராய், அமைதியானவராய் எந்நேரமும் புன்சிரிப்புத் தவழும் முகமும் அவரை நினைக்கும் போதெல்லாம் அந்தப் புன்சிரிப்பே நினைவுக்கு வரும்.

விவசாய உயிரியல்துறையில் ஒரேஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரான இவர், கடமை உணர்வும் செயல்திறனும் கொண்டவர். விவசாய பீடம் விரிவடைந்து வந்தவேளை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு மேலதிக பயிற்சிகள் தேவைப்பட்டதினால் அத்தகைய பயிற்சிகளை ஒழுங்கு செய்துகொண்டிருந்த வேளை இவர் நோய்வாய்ப்பட்டதை அறிந்தேன். ஏனைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பயிற்ச்சிக்காக வெளிநாடு சென்ற வேளை நோயின் காரணமாக இவர் இக்குழுவில் இடம்பெறாதுவிட்டார். எனினும், சிகிச்சையுடன் கடமையைத் தொடந்தார்.

'கடமையைச் செய்! பலனை எதிர்பாராதே' என்பதற்கிணங்க அவர் இறுதிவரை செயற்பட்டுவந்தார். விவசாய உயிரியல் துறைக்கு ஓர் உத்தம பணியாளராய் யாவர் உள்ளங்களிலும் இடம்பிடித்து இவ்வுலகை விட்டு நீங்கிய அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் S.இராஜதுரை**
(42890)(52-14-15), **பீடாதிபதி, விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.**


## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 077-3086939,
0777-246117,
(46-45) 077-6018467. (42842)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை.
22.சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1936 - 10 - 04 |  | 2004 - 02 - 21 |

அமரர்
**சங்கரப்பிள்ளை யோகராசா**
(ஓய்வுபெற்ற கிராமசேவையாளரும் சமாதான நீதிவானும்)

ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவு எம்முடனே வாழுது ஐயா!
பாரினில் நீர்வாழ்ந்த வாழ்க்கையில்
பாசத்தைப் பொழிந்தீரே !
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவை மறவோமே ஐயா !
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

**மனைவி**

(42895) (51-14-15)


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

11-03-2005 - 16-03-2005

முன்கூட்டியே பதிவு செய்யவும்

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ நடுக்கம்
☆ நித்திரை குறைவு ☆ ஆண்மைக்குறைவு ☆ நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்! ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பு,ரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

*குறிப்பு:* இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: *பலரது பாராட்டைப் பெற்ற*
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399 (21-46-45)
(சீ-41373)

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.


## 21 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



*தோற்றம்* 10 06 1948

*மறைவு* 04 03 1984

அமரர்
**கந்தையா தவலிங்கம்** (வேலணை)

அன்போடும் பண்போடும் எம்மோடு வாழ்ந்தீர்
இன்று நீர் மறைந்து இருபத்தோராண்டுகளாகின்றன!
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

56/2
கணேசபுரம்,கிளிநொச்சி.
தகவல்:குசன்(மகன்)
☎0777 152330.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
உற்றார்,உறவினர்கள்.
(42886)(52-17-34)

# கல்வளை சங்கம்புலவு வீதியில் பயன்பாடின்றி காணப்படும் பாலம்




சண்டிலிப்பாய் - கல்வளை - சங்கம்புலவு தம்மளை மயான வீதிக்குச் செல்லும் பாதையில் உள்ள பாலம் 1985ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு பயனின்றிக் காணப்படுகிறது. பாலத்தை இரு மருங்கிலும் இணைக்கும் விவசாய வீதி வழுக்கையாறு நீரோட்டத்தால் அழிக்கப்பட்டுள்ளது.

பாலம் புனரமைக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்த நிலையிலும் வாகனங்களோ, சைக்கிள்களில் செல்பவர்களோ, விவசாயிகளோ இவ்வீதியால் பயணம் செய்தது கிடையாது.

கோடைகாலத்திலும் சரி, மாரிகாலத்திலும் சரி மக்கள் பாலத்தற்கு அருகில் உள்ள பள்ளவாய்க்கால் மூலமாகவே செல்வது வழமை.

மாரிகாலத்தில் தம்மளை மயானத்திற்கு பிரேதம் எடுத்துச் செல்லும் போது சண்டிலிப்பாய் - கல்வளை பிரதேச மக்கள் மிகவும் சிரமங்களை சந்திக்க வேண்டியுள்ளது.

இந்தப் பாலத்தை இணைக்கும் வீதியைப் புனரமைத்து - பாலம் ஊடாகப் போக்குவரத்து செய்ய வழிவகை செய்து தருமாறு அப்பகுதி பொதுஅமைப்புகளாலும், பொது மக்களாலும் முன் மொழிவுத்திட்டங்கள் முன் வைக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை.



தற்போது வழுக்கையாறு மீள்புனரமைப்பு திட்டத்தின் ஆரம்ப கட்ட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கல்வளை - சங்கம்புலவு பாலம் அமைந்துள்ள பிரதேசம் வழுக்கையாறு நீர்பாசனத் திட்டத்தோடு தொடர்புடையது.

எனவே, 20 வருடங்களுக்கு மேலாக பாவனையின்றியுள்ள பாலத்தையும் அதனோடு இணைந்த வீதியையும் வலி. தென்மேற்கு, பிரதேச செயலகம், வலி. தென்மேற்கு பிரதேசசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், அரச அதிபர் அலுவலகம் ஆகியவை முன்வந்து புனரமைக்கவேண்டும்.

தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணபதன் மூலம் பிரதேச அபிவிருத்தியை பேண்தகுவுள்ளதாக மாற்றலாம். ★

- நாவாலியூர் செ.ரமேஷ் (ச.நி)

## மெய்வன்மைப் போட்டியும் சிறுவர் பூங்கா திறப்பும்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

புத்தூர், புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியும் வித்தியாலய முதல் அதிபர் க.முருகேசு ஞபகார்த்த சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை வித்தியாலய அதிபர் நா.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், டாக்டர் இ.தியாகராசா, பொதுச் சுகாதார பரிசோதகர் பொ.கோபாலேந்திரன் ஆகியோரும் - கலந்துகொள்ளவுள்ளனர். (த)

## வயோதிபரின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்12

கோண்டாவில் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் உயிரிழந்து கிடந்தார் எனத் தெரிவித்து வயோதிபர் ஒருவருடைய சடலம் ஒன்று கோப்பாய் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் அரசடி வீதியைச் சேர்ந்த எஸ்.மகாலிங்கம் (வயது-63) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் பகல் வீட்டில் உயிரிழந்துகிடந்தார் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (த-7)

## வதந்தியால் பதற்றம் ஓட்டமாவடியில்

கொழும்பு,12

ஓமடியாமடுப் பகுதியில் முஸ்லிம்கள் மூவர் வெட்டிக்கொல்லப்பட்டனர் என்று செய்தி பரவியதையடுத்து, நேற்றுமுன்தினம் காலை முதல் ஓட்டமாவடியில் பெரும் பதற்றம் பரவியது. எனினும், கொல்லப்பட்டவர்கள் என்று கூறப்பட்ட மூவரும் உயிருடனேயே இருக்கின்றனா என்று உறுதிப்படுததபட்டுள்ளது.

விறகு வெட்டுவதற்காக ஓமடியாமடுப் பகுதிக்கு இரு நாள்களின் முன்னர் சென்ற முஸ்லிம்கள் மூவர் வெட்டிக் கொல்லப்பட்டனர் என்று நேற்றுமுன்தினம் காலை செய்தி பரவியது. இதனையடுத்து, அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பொலீஸாரும், புலிகளும் இணைந்து குறிப்பிட்ட பகுதிக்கு நேரில் சென்று தேடுதல் நடத்தினர். எனினும், சடலங்கள் எவையும் கைப்பற்றப்படவில்லை.

அந்த மூவரும் காட்டுக்குள் தங்கியிருந்து விறகு வெட்டிக் கொண்டு வெளியே வந்த போது தாம் அவர்களை கண்டுபிடித்தனர் என கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-க)

# உலக வங்கிப் பிரதிநிதியின் கருத்துக்கு எதிராக அனைத்துத் தரப்பும் போர்க்கொடி தூக்கவேண்டும்

## நாடாளுமன்றில் விமல் வீரவன்ஸ அறைகூவல்

புலிகளிடம் உத்தியோகபூர்வமற்ற தனி ராஜ்ஜியம் இருக்கின்றது என உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி கூறியிருப்பதை ஏற்றுக கொள்ளவே முடியாது. நாட்டின் நன்மை கருதி அனைத்துத் தரப்பும் இதற்கு எதிராகப் போர்க கொடி தூக்கவேண்டும் - என்கிறார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

நாடாளுமன்றில் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் அனுமதியுடன் கடந்த புதனன்று விசேட உரை ஒன்றை ஆற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புலிகளுடன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்துகொண்ட உடன்படிக்கை இந்த நாட்டுக்குப் பேராபத்தை விளைவிக்கப் போகிறது என்பதை நாம் ஏற்கனவே எடுத்துக் கூறியிருந்தோம். அந்த ஒப்பந்தத்தின் விளைவே இன்று உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட்டின் கருத்து.

புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக்கொடுக்கத் தலைப்படும் பீற்றர் ஹெரோல்ட்டை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும். தனது கவனத்தை வாபஸ் பெறவேண்டும் என நாம் வலியுறுத்திய பின்னரும் ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு விடுத்த அறிக்கையில் அவர் தனது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிசெய்துள்ளார். இது இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவித்துள்ளது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் நாட்டை பிரிவினைக்கு இட்டுச் செல்லும் இதுபோன்ற தீய சக்திகளுக்கு எம்மால் இடமளிக்கமுடியாது. வடக்கு-கிழக்குப் பகுதியில் புலிகளை பிரதான சக்தியாக அங்கீகரிக்க முடியாது. அங்கு வாழும் முஸ்லிம், சிங்கள மற்றும் புலிகளுக்கு எதிரான தமிழரின் நிலை என்ன? அவர்களை யார் பாதுகாப்பது? இந்த மக்களை புலிகளின் இரும்புச் சப்பாத்துகளுக்குள் மிதிக்க வைககும் முயற்சிக்கு எம்மால் இடமளிக்கமுடியாது.

முஸ்லிம் மக்களை ஒதுக்கிவைத்துவிட்டு தான்தோன்றித்தனமான கருத்தை பீற்றர் ஹெரோல்ட் முன்வைத்துள்ளார். இறையாண்மையுள்ள ஒரு நாட்டில் வெளிநாட்டவர் ஒருவர் இப்படியொரு கருத்தை வெளியிடுவதற்கு உரிமையுண்டோ? அது சட்ட விரோதமான செயலில்லையா?

புலிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்கவே தான் செய்துகொணட உடன்படிக்கையில் தவறு இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

பீற்றர் ஹெரோல்ட்டின் தவறான கருத்து நாட்டை மேலும் ஒரு பயங்கர சூழ்நிலைக்கு இட்டுச் சென்றுவிடும் என்ற ஐயப்பாடு ஏற்படுகின்றது. எனவே, எம்மிடம் இருக்கும் வாதப் பிரதிவாதங்களைக் கைவிட்டு நாம் நாட்டுக்காகக் குரல்கொடுக்கவேண்டும். எமது நாட்டைக காட்டிக்கொடுக்கவோ, பிரித்தாளவோ முற்படுபவர்களுக்கு எதிராகப் போராடவேண்டும். பீற்றர் ஹெரோல்ட்டின் கருத்தை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஏற்றுக்கொள்கிறேன் என அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு புலிகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை விட மோசமான ஒரு செயலாகும் - என்றார் அவர். (எ-க)

### கோண்டாவில் சனசமூக நிலையத்தில்

## மகளிர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன

கோண்டாவில்,மார்ச்12

கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையத்தில் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மகளிர்தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

ஊரகக்கிளைத் தலைவி செல்வி க.நந்திதா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி, நல்லூர்க் கோட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பூமகள், மானிப்பாய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன், ஸ்ரீவாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் வ.சந்திரசேகரம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இதில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்றிட்ட உத்தியோகத்தர் வ.வேழினி அரசமைப்பில் பெண்கள் உரிமை தொடர்பான சட்டங்கள் பற்றி அகலத்திரையில் படமெற்றிக் கருவி (புறஜெக்ரர்) மூலம் காண்பித்து விளக்கமளித்தார்.

கோண்டாவில் பிரதேசத்தில் பெண்களை குடும்பத் தலைவிகளாகக் கொண்ட குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சுயதொழில் வாய்ப்பை வழங்குவதற்கு ஏற்றவழிவகை செய்யக் கோரியும் ஸ்ரீவாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகததிற்குத் தேவையான கல்வி உபகரணங்கள், தளபாட உதவி வழங்கக் கோரியும் யாழ். மாவடட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனுக்கு மகளிர் அரசியல்துறைப் பொறுபபாளர் பூமகள் ஊடாக மகஜர் ஒன்றைக் கல்வி வளர்ச்சிக் கழக செயலாளர் கையளித்தார்.

நிகழ்வின் இறுதியில் நல்லூர்க் கோட்ட அரசியல்துறை மகளிர் பிரிவினர் முன்பள்ளி மாணவர்களுக்கென ஒரு தொகுதி கல்வி உபகரணங்களை முன்பள்ளி ஆசிரியர் செல்வி கவிதா தர்மலிங்கத்திடம் கையளித்தனர். (86-49)


## பிரபல இசைக்கலைஞர் ரங்கன் காலமானார்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணத்தின் பிரபல இசைக் கலைஞர் செல்லத்துரை தனேந்திரகுமாரன் (வயது -57) நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரியில் காலமானார்.

ரங்கன் என்று அழைக்கப்பட்ட இவர் 1974 ஆம் ஆண்டில் ரங்கன் இசைக் குழுவை அமைத்து அதன்மூலம் 90 களின் நடுப்பகுதி வரை இலங்கையின் சகல பாகங்களிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

கிற்றார் மற்றும் ஆங்கில மென்ரலின் வாத்தியக் கருவிகளை தனக்கே உரிய தனித்துவத்துடன்வாசித்துப் புகழ்பெற்றவர் ரங்கன். ஓகன், புல்லாங்குழல், வீணை,கிற்றார் மற்றும் செனாய் போன்ற இசைக் கருவிகளையும் சிறப்பாகக் கையாளும் திறமை வாய்ந்தவர்.



கிற்றார் இசைக் கருவியை நுட்பமாகப் பழுதுபார்க்க வல்ல கலைஞரும் கூட.

ஒலி நாடாக்கள் பலவற்றை வெளியிட்டுள்ள இவர், ஏராளமான நாடகங்களிற்கும் இசையமைத்துள்ளார்.

இவருக்கு 'இசைமணி' என்ற பட்டம் 1976 ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. ரங்கனைப் பின்பற்றி அவரின் பிள்ளைகளும் இசைத்துறையில் பிரகாசித்து வருகின்றனர். (த)



கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற மகளிர்தின நிகழ்வுகளின்போ[illegible] நல்லூர் பிரதேச அரசியல்து[illegible] மகளிர் பிரிவுத் துணைப் பொற[illegible] ளர் சுடர்அரசி, முன்பள்ளி மா[illegible] களுக்கான கற்றல் உபக[illegible] களை முன்பள்ளி ஆசிரியை [illegible] த.கவிதாவிடம் கையளிப்ப[illegible] லாவது படத்திலும் அந்த நி[illegible] கலந்துகொண்ட ஒருதொகுதி[illegible] களை இரண்டாவது படத்[illegible] காணலாம்.

(படங்கள்: நே[illegible]

## Jaffna College Institute of Technology
**Vaddukoddai**

கிழ்வரும் பயிற்சி நெறிகள் எமது நிறுவனத்தில் ஆரம்பமாகவுள் ளன. விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 18.03.2005 இற்குமுன் பூர்த்தி செய்துதரவும்.
G.C.E.O/L வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**Certificate Craft Courses**

(தமிழ் மொழி மூலம்)

- Mechanical Craftsman Practice (லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி)
- Welding Practice (ஒட்டு வேலை பயிற்சி)
- Electrical Wiring & Installation Practice (மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Automobile Technology (மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்)
- Radio & T.V.Servicing (ரேடியோ, ரீவி பழுதுபார்த்தல்)
- Air-Conditioning & Refrigeration (குளிரூட்டுதல் பயிற்சி)

காலம்: 1 வருடம்

Facilities: LIBRARY & SPORTS

விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**DIRECTOR**
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.
Email:jcit@sltnet.lk Tel.No.: 0602213139
(சி/41422)(42-15-18)


# அனர்த்த நிவாரண உதவி நிதி தொடர்பாக 26 பேரை நீதிமன்றில் ஆஜராகப் பணிப்பு

கொழும்பு,மார்ச்12

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்தைக் கையாள்வதற்குமான தேசிய நடவடிக்கைச் செயலணியின் அங்கத்தவர்கள் அடங்கலாக 26 பேரை மேன்முறையீட்டு நீதிமன்றில் எதிர் வரும் 24ஆம் திகதி ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தேசமான்ய லலித் கொத்தலாவல தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்த பின்னரே இந்த உத்தரவு நீதிமன்றத்தால் பிறப பிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் தொடர் பாகப் பெருந்தொகை நிதி வந்து குவிகிறது. இதனைக் கையாளும் முறை குறித்து மக்களுக குத் தெளிவுபடுத்தும் செயற்றிட்டம் அரசிடம் இல்லை.

எனவே, இத்தகைய ஒரு செயற்றிட்டத்தை அரசு தோற்றுவிக்க நீதிமன்று உத்தரவிட வேண்டும் எனக் கோரும் மனுவைக் கொத்த லாவல தாக்கல் செய்திருந்தார்.

பிரதிவாதிகளாகத் தேசிய நடவடிக்கை செயலணி உறுப்பினர்கள் அமைச்சு, வெளி நாட்டு அமைச்சு ஆகியவற்றின் செயலாளர் கள், திறைசேரி ஆணையாளர் உட்பட 26 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கை வந்து குவியும் நிவாரண நிதி தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புச் சொல்வதற்கு உரிய நபரோ, நிறுவனமோ இல்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தையடுத்து, அதன் பின்னர்தான் செயற் பாடுகளைக் கையாளத் தேசிய நடவடிக்கைச் செயலகம் ஜனாதிபதி யால் நிறுவப்பட்டது தெரிந்ததே.

(க-3)

## ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனத்துக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.100 கோடி நட்டம்

கொழும்பு,மார்ச்12

ஆழிப் பேரலையால் உல்லாசப் பயணத் துறைக்கு ஏற்பட்ட தாக்கத்தினாலும் அதிகரித்த எரிபொருள் விலையினாலும் நடப்பு நிதியாண் டில் தமது நிறுவனத்திற்கு சுமார் நூறு கோடி ரூபா நட்டமேற்படும்நிலை உருவாகியுள்ள தாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான நிறு வனம் அறிவித்துள்ளது.

கடந்த வருடத்துக்கான நிதியாண்டில் ஸ்ரீலங் கன் எயார் லைன்ஸ் 450 கோடி ரூபாவை நிகர லாபமாக ஈட்டியிருந்தது.

நஷ்டம் ஏற்படும் என்பதால் புதிய விமானச் சேவைகளை இவ்வாண்டில் ஆரம்பிப்பதை இடைநிறுத்தியிருக்கிறது ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ். எனினும், ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையிலான வாராந்த விமானச் சேவைகளை அதிகரிப்பதற்கும், நியூ யோர்க்கிற்கான விமானச் சேவையைத் தினந் தோறும் நடத்துவதற்கும் உத்தேசித்துள்ளதாக வும் அந்நிறுவனத்தின் தொடர்பாடல் தலைமை அதிகாரி சந்தன டி சில்வா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பைச் சமா ளித்தாலும்கூட ஆழிப்பேரலை அனர்த்தம் தமது வருமானத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளதாகக் குறிப்பிட்டார் அவர். இலங்கைக்கு வரும் பயணிகள் வீதம் ஆழிப்பேரலைக்குப் பின் 70 வீதத்திலிருந்து 20 வீதமாக வீழ்ச்சி யடைந்ததென்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் இலங்கை அரசின் 60 வீத பங்குகளையும் டுபாய் எமிரேட்ஸ் நிறுவனத்தின் 40 வீத பங்குகளை யும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-3)

## பண்டத்தரிப்பில் சித்தஆயுள்வேத வைத்தியசாலை

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகக் கட் டடத்தில் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை எதிர் வரும் 15ஆம் திகதி முதல் செயற்படவுள் ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்ரர் இதுபற்றிப் பிரதேச சபையின் பண்டத் தரிப்புப் பட்டின உப அலுவலகப் பொறுப் பதிகாரிக்குக் கடிதம் மூலம் அறிவித்துள் ளார்.

பணடத்தரிப்புப் பகுதி யிலுள்ள மக்களின் நலன்கருதி இங்கு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றைத் திறக்கு மாறு பண்டத்தரிப்புக் கிராம அபிவிருத்திச் சங்கமும் பல பொது நல அமைப்புகளும் வலி.தென் மேற்குப் பிரதேச சபையிடம் கடந்த பல வருடகால மாகக் கோரிக்கை விடுத்துவந்துள் ளமை குறிப்பிடத்தக் கது.

(8-135)


## பயிலுநர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புகைப்பட நிறுவனம் ஒன்றிற்கு பயிலுநர்கள் தேவை. N.A.B ஊடாகப் பயிற்சியும், படியும் கொடுக்கப்படும். 25 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பங்கள் 31.03.2005 வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. **2520**
C/o. உதயன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(42944)(42-15-18)



## வளன்புரம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலய வருடாந்தப் பெருவிழா - 2005

**(15-03-2005 - 19-03-2005)**

(புனித சூசையப்பரே! எங்கள் அவசரங்களில் உம்மண்டை ஓடி வந்தோம்)

15-03-2005 - செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு (தினமும்) திருச்செபமாலையும் தொடர்ந்து கொடியேற்றத்துடன் பெருவிழா ஆரம்பமாகும்.
17-03-2005 - இறைத்தியான வழிபாடு இடம்பெறும்.
18-03-2005 - திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் பவனியும் ஆசீரும்
19-03-2005 - பெருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து புனிதரின் திருச் சொரூபப் பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

*புனிதரின் அருளாசி பெற அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

புனித சூசையப்பர் ஆலயம்.
வளன்புரம்.
கொழும்புத்துறை.

பங்குத் தந்தையும்,
இறை மக்களும்
(வளன்புரம்).
(42924)(21-15-18-42)



உ
சிவமயம்

## நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக!

கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் விழா 25.03.2005 அன்று பொது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கும் நேர்த்திப் பொருள்கள் கொடுக்கும் அடியார்களுக்கு மான அறிவித்தல்.

மேற்படி பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற் கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல வாடகை 13.03.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும். நேர்த்திப் பொருள்கள் தண்டல்களுக்கு 19.03.2005 சனி தொடக்கம் வழ மையான இடங்களுக்குத் தொண்டர்கள் வருகை தரு வார்கள் என்பதை அனைவருக்கும் அறியத்தரு கிறோம்.

- ஆலய பரிபாலனசபை.
(சி-41428)(29-15-18-42)



## 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி

*மண்ணகத்தில்* 28 – 08 – 1951



*விண்ணகத்தில்* 12 – 03 – 2001

## திருமதி பரமானந்தம் அல்வினம்மா

ஆண்டுகள் நான்கு ஆனதம்மா
அன்பு முகம் மறைந்தின்று
ஆசை மாமாவை அழைத்தாயோ
அருகிருந்து கதை பேச
ஆறவில்லை எம் துயரம் - என்றும்
உம்மவர்க்காய் இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்

*புதுமை மாதா கோயில்*
*கிழக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(42962)(42-15-18)

நித்தம் உம் பிரிவால் வாடும்:
**சின்னத்தம்பி மாமா குடும்பம்.**



தமிழ்,சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு
விசேட சலுகைகள்

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

FedEx Express®



தொடர்புகளுக்கும், மேலதிக விபரங்களுக்கும் நாடுங்கள்

## திருமுருகன் கொம்நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கு 6/= மட்டுமே
இந்திய அரபு இராச்சிய நாடுகளுக்கு 25/= முதல் 40/=
இந்தியாவுக்கு 25/= மட்டுமே

உங்கள் இருப்பிடங்களிலிருந்தே பாசல்களை அனுப்பிட நீங்கள் அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்.
021 222 7835

(சி-41415)(42-18-16-15)



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சபாபதி கணபதி

(கால்நடை வைத்தியர், ஊர்காவற்றுறை)



**மலர்வு** 11-05-1925 **உதிர்வு** 07-03-2000

கண்ணைப்போல் நீர் காத்த
கண்மணிகள் கண்ணீருடன்
நினைவு கூருகின்றனர்
வாழ்வளிக்கும் சூரியன் போல்
எங்களை மேலிருந்து போசித்திடுங்கள்.

திதி :- 12-03-2005

ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டும்-
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், பெறாமக்கள்.**

*ஊர்காவற்றுறை.*
(42951)(42-15-18)

# யாழ். இந்துவை இன்னிங்ஸால் வென்றது யாழ். மத்திய கல்லூரி

## இரண்டாவது முறையும் சதம் அடித்தார் றொகான்

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் சிநேகபூர்வ கிரிகெட் போட்டித் தொடரில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணிக்கும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்மத்திய கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸினாலும் 42ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றது.

யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடநத இந்த ஆட்டத்தில் முதலாவது இன்னிங்கிஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

உமாகரன் 48ஓட்டங்களையும் ஜனகன் 19 ஓட்டங்களையும் தம் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மத்திய கல்லூரி அணி வீரர் விஜயன் 24 ஓட்டங்களைக்கொடுத்து 6விக்கெட்டுக்களையும் பிரசாத் 31ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 9விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்தியது.

றொகான் ஆட்டம் இழக்காமல் 104 ஓட்டங்களையும் பிரசாந் 41 ஓட்டங்களையும், செஸ்ரன் 32 ஓட்டங்களையும் தம் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக்கல்லூரி அணி வீரர் ஜனார்த்தனன் 90 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும் கெமக்குமார் 38ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும் கௌசிகன் 87ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதில் ஜனந்தன் 61ஓட்டங்களையும் தினதர்ஷன் 18 ஓட்டங்களையும் தம் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர் மதிப்பிரியன் 47ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுக்களையும் விஜசன் 55 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (3-190)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி வீரர்களையும் மற்றும் அதிபர், பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம். (3-86)



வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் முதலாவது இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவிகளான செல்வி நளாயினி, செல்வி ஜர்மிளா ஆகியோருக்கு வலிகாமம் வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் வெற்றிக் கோப்பை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி ஆசிரியர் பொ.ரவிச்சந்திரன், ஆசிரியை செல்வி மார்க்கண்டு ஆகியோரையும் காணலாம். *(படம்: தொல்புரம் செய்தியாளர்)*

# எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டம் ஸ்கந்தாவில்

## 29 கழகங்கள் மோதுகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச்12

தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையினா நடத்தும் எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்ச் சுற்றுப்போட்டி எதிர்வரும் புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த போட்டி 'ஏ', 'பி' என இருபிரிவுகளாக நடைபெறவுள்ளது. 'ஏ' பிரிவில்- வட்டக்கச்சி வி.க., சில்வஸ்ரார் வி.க., யங்கம்பன்ஸ் வி.க., ஞானமுருகன் வி.க., பொற்பதி வி.க., கலைவாணி வி.க., அல்வாய் நண்பர்கள் வி.க., ஏ.எல்.வி.க., நவசக்தி வி.க., மாவத்தை வி.க., கரணவாய் வி.க., சென். தோமஸ் வி.க., விநாயகர் வி.க., சென். அன்ரனிஸ் வி.க., அராலி ஐக்கிய வி.க. ஆகியனவும்-

'பி' பிரிவில் நாமகள் வி.க., சென் மைக்கல் வி.க.,தென்மராட்சி வி.க., யாழ். பல்கலைக் கழக வி.க, ஞானகலா வி.க., றேஞ்சஸ்ஸ் வி.க., பாடுமீன் வி.க., யங்கென்றிசியன் வி.க., கலைமதி வி.க., எவரெஸ்ற் வி.க., காளியம்பாள் வி.க., இளந்தென்றல் வி.க., கலைவாணி வி.க., முல்லை வி.க ஆகியனவும் - இப்போட்டியில் பங்குபற்றுகின்றன. (3-190)

### மல்லாவியில் விளையாட்டுப் போட்டி

மல்லாவி,மார்ச்12

மல்லாவி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த மாதம் 23ஆம்திகதி நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி புஸ்பவதி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், துணுக்காய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மிகவும் எளிமையாகவும், சிறப்பாகவும் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரதி இல்லம் முதலாம் இடத்தையும், கம்பன் இல்லம் இரண்டாம் இடத்தையும், வள்ளுவன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.(ஐ-322)

### இல்ல மெய்வன்மைப்போட்டி

இளவாலை,மார்ச்12

இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரியும், இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிப 1.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளர் கே.தனபாலசிங்கம் கலந்து கொள்வார். திருமதி அருந்தமலர் தன பாலசிங்கம் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார்.(3-48)

# விளையாட்டுச் செய்திகள்

### ஸ்ரான்லி வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்12

நல்லூர் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவந்த மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கனகரத்தினம் மகா வித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. (3-190)

### உரும்பிராய் இந்து முதலிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

கோப்பாய் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இடைக்காடு இந்துக் கல்லூரி இரண்டாவது இடத்தையும், அச்சுவேலி மத்திய கல்லூரி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. (3-190)

### இருபிரிவுகளிலும் கொக்குவில் இந்து வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்12

நல்லூர் கோட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையில் 15,17,19 வயது அணிகளுக்கு நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டு பிரிவுகளிலும் முதலிடம் பெற்றது.

இச் சுற்றுப்போட்டி முடிவுகள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி. (3-190)

### கோப்பாய்க் கோட்டத்தில் கரபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்12

கோப்பாய்க் கோட்ட மட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 15,17,19 வயது அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

அச்சுவேலி மத்திய கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, ஆவரங்கால் மகா ஜனாக் கல்லூரி.

(3-190)

### வலைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

கோப்பாய்க் கோட்டமட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 15,17,19 வயது அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம், கோப்பாய் மகா வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய கிறிஸ்தவக் கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம்.

(3-190)

### மென்பந்துக் கிரிக்கெட் போட்டி

ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் தனது 28ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வை.அர்ஜன் ஞாபகார்த்தமாக மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

பத்துப் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

### கிளிநொச்சி முருகானந்தவின் மெய்வன்மைப் போட்டி

பரந்தன்,மார்ச்12

கிளிநொச்சி முருகானந்த மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் கடந்த 6ஆம் திகதி முரசுமோட்டையில் இடம்பெற்றன.

வித்தியாலய முதல்வர் க.மதுரநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.சின்னராசா, கண்டாவளைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் வீஇராசகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் போட்டிகள் முடிவுற்றதும் பலர் கருத்துரை வழங்கினர். தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (3-203-352)

### கண்டாவளை ம.வி. மெய்வன்மைப் போட்டி

பரந்தன்,மார்ச்12

கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் கடந்த 3ஆம் திகதி நடைபெற்றன.

வித்தியாலய முதல்வர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கினையும் தமிழீழத்தேசியக் கொடியையும் கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.வ.பத்மநாதன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களின் உரைகள் இடம்பெற்றன. (3-203-352)

### அமெரிக்கமிஷன் முதலிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

விக்கினேஸ்வரக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

(3-190)

### துரைச்சாமி ம.வி. முதலிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

தீவக வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றது.

நயினாதீவு கணேஷா வித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆகியன இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றன.

(3-190)

### மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்12

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது

இப் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான விரிவுரைகளும், பயிற்சிகளும் எதிர்வரும் 19ஆம் திகதி யாழ். பொது விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளன.

இவர்களுக்கான விரிவுரைகளையும் பயிற்சிகளையும் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் ஏ.எம். யாப்பாவும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் உதவி மத்தியஸ்தராகக் கடமையாற்றிய எம்.நிமால் விக்கிரமசிங்க வழங்கவுள்ளார். இதற்கான சகல ஒழுங்குகளையும் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் யாழ். உதைபந்தாட்ட லீக்கும் மேற்கொண்டுள்ளன. (3-190)

# மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் 7 ஆவது ஆண்டுதின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்12

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் 7ஆவது ஆண்டுதின வைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்முறை இலங்கைப் புதிய மாவட்டம் 306 B1இற்கு 2005/06 இற்குரிய உப ஆளுநர் பதவிக்கு வடமாகாணத்திலிருந்து முதன்முறையாகக் கழகத்தின் சார்பில் சிரேஷ்ட தலைவர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜாவின் பெயரை அறிவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக, முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் சபையின் முன்னாள் தலைவரும் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பணிப்பாளர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவருமான லயன் சுனில் வட்டவல, லயன் சீமாட்டி மானெல் வட்டவல ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக அகில இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரும் முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் சபையின் தற்போதைய தலைவருமான லயன் மோகன் டிசில்வா, லயன் சீமாட்டி சிராந்தி ஆகியோரும் -

சிறபபு விருந்தினர்களாக மாவட்டம் 306 B முன்னாள் ஆளுநர்களான லயன் எஸ்.சிவபாதசுந்தரம், லயன் கே.தில்லைநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(3-202)

உ

அம்பிகை துணை

**யாழ்.கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய**

**தாரண வருடாந்த மஹோற்சவம்-2005**

| | | |
|---|---|---|
| 13.03.2005 | ஞாயிற்றுக்கிழமை | கொடியேற்றம் காலை 10.00மணி |
| 24.03.2005 | வியாழக்கிழமை | வேணுகோபால் உற்சவம் காலை 06.00மணி |
| 25.03.2005 | வெள்ளிக்கிழமை | சப்பரம் மாலை 06.00மணி |
| 26.03.2005 | சனிக்கிழமை | தேர் காலை 08.00மணி |
| 27.03.2005 | ஞாயிற்றுக்கிழமை | தீர்த்தம் காலை 09.00மணி |
| 28.03.2005 | திங்கட்கிழமை | பூங்காவனம் மாலை 06.00 மணி |

★ அடியார்கள் வந்து அம்பிகையைத் தரிசித்துய்யுமாறு அழைக்கப்படுகின்றனர்.

கச்சேரி - நல்லூர் வீதி.
யாழ்ப்பாணம்.

- ஆலய பரிபாலன சபை.

(42975)(42-32-17-18)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
05
04
1948



மறைவு
07
12
2004

**அமரர் சண்முகம் மகேந்திரன் (பேபி)**

கடந்த 07.12.2004இல் கனடாவில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் சண்முகம் மகேந்திரன் (பேபி)
அவர்களது ஆத்மா சாந்தியடைய வேண்டி,
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(42983)(42-33-17-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
03 — 04 — 1925



உதிர்வு
10 — 02 — 2005

**அமரர் பரமானந்தர் சிவசுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற அதிபர், திருமுறைப் பண்ணிசைமணி)
திதி: (12.03.2005) துதியை

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் சிகரமாய்
கண்ணும் கருத்துமாய்க் கல்வி புகட்டுவதில் நல்லாசானாய்
பண்ணிசை மணியாய் முத்தமிழிலும் வித்தகராய்
விண்ணுலகம் சென்று வர்த்தலை மருதடி விநாயகர் பாதம் சேர்ந்தீரோ!

அன்பு மறவாத:
மனைவி, மகள்,
மருமகன், உற்றார்,
உறவினர்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.

(42986)(42-17-18)

# தேவ ஊழியர் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,மார்ச்12

கொழும்பு இறையியல் கல்லூரியின் ஏற்பாட்டில் தேவ ஊழியர்களுக்கான கற்கைநெறி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தொடர்ந்து 5 தினங்களுக்கு யாழ்.தேவசபையில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2மணி வரை நடைபெறவுள்ள இக்கற்கை நெறியில் இறையியல் II என்னும் பாடத்தை விரிவுரையாளர் ஜேசன் செல்வராஜா நடத்துவார்.

(3-202)

# தீவக சிகை ஒப்பனையாளர் வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

தீவக சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை சங்கப் பணிமனையில் இடம்பெறவுள்ளன.

சங்கத்தலைவர் பொ.கிருபதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகள், ஒன்றியப் பிரமுகர்கள், வேலணை ஊர்காவற்றுறை அரசியல் துறைப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

(3-203)

# பட்டப்படிப்புகள் பீட அரையாண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்12

உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் டிப்ளோமே கற்கைநெறிகளான குடித்தொகை அபிவிருத்தி, பொதுநிர்வாகம் ஆகியவற்றுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதியும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான அனுமதி அட்டை, நேர அட்டவணை என்பனவற்றை உயர்மட்டப் படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் - பொது நிர்வாகக் கற்கை நெறிக்கு இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய மீள் பரீட்சார்த்திகள் தங்கள் மீள் பரீட்சைக்கான விண்ணப்பத்தினை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படியும் - உயர்பட்டப் படிப்புகள் பீடப் பதில் பீடாதிபதி கேட்டுள்ளார்.

(3-203)

# இலவச கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளையும் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

ஈலிங் லண்டன் சிறி கனகதுர்க்கை அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்பரிசோதனை முகாமில் யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளார்.

(த-202)

# சிறுவர்களுக்குச் சைக்கிள் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,மார்ச்12

கனடாவில் இயங்கும் புங்குடுதீவுப் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் வட இலங்கை சர்வோதயத்தினர் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு புங்குடுதீவிலுள்ள வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

வட இலங்கை சர்வோதய நிலையப் பொறுப்பாளா செல்வி க.புஸ்பமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் புங்குடுதீவில் உள்ள வல்லன், வீராமலை, ஊராதீவு, கேரதீவு, அரியநாயகன் புலம், சங்கத்தார் கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வறிய குடும்பங்களிலுள்ள சிறுவர்களுக்குத் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

(3-203)

# அராலி வடக்கு உபதபாலகம் இடம் மாறுகிறது

சங்கானை,மார்ச்12

அராலி வடக்கு நாகேந்திர மடத்தடியில் இயங்கி வந்த உபதபாலகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் அராலி வடக்கு மாவடி ஒழுங்கையில் உள்ள தனியார் ஒருவரின் வீட்டிற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என தபாலகத்தின் உப தபாலதிபர் செல்வி ச.தீபசாந்தினி தெரிவித்துள்ளார். (3-29-203)

**G.A.Q. 2006**

**யாழ்ப்பாணம்**

ஆங்கில இலக்கியம், மொழியியல் வகுப்புகள்
ஆசிரியர் : சோ.பத்மநாதன்
ஆரம்பம்: 12.03.2005 காலை 8 மணி

விவரங்களுக்கு
S.அருள்நங்கை,
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்

(42990) (32-17-18-42)

**Psychosocial Trainers**
**Communinty Mental Health**

We are looking for highly motivated individuals with previous experience in social work, counselling or health related fields to join our team of trainers. They will be provided on-the-job training in psychosocial skills.

**Applicants shall be;**

- ★ Graduates in sociology, psychology, biology or related fields. Others with lesser qualifications may also apply.
- ★ Ability to teach and train others.
- ★ Preferably be under 40 years of age.
- ★ A good knowledge of English is essential.
- ★ Ability and willingness to travel in the community, village and periphery.
- ★ Valid motorcycle riding license will be an asset.
- ★ Computer literacy will be helpful.
- ★ Females are encouraged to apply.

**Applications should reach on or before 21st March2005.**

The President,
"Shanthiham",
Association for Health and Counselling,
15,Kachcheri - Nallur Road,
Chundikuli, Jaffna.
TP & Fax - 021-2223338
e-rnail-psych@sltnet.lk

(C/41441)(16-42)

## துயர் பகிர்கின்றோம்

எமது கலாசாலையின் ஆசிரிய மாணவி
செல்வி சுதர்ஷா அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னம்பலம் இராமநாதன்**

அவர்கள் காலமாகியதையிட்டு நாம் மிகவும் கவலை அடைகின்றோம். பிரிவால் வருந்தும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினர்.

(42987)(42-17-18)

# மரண அறிவித்தல்கள்

## R.J.நவரட்ணம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும்கொண்ட இளைப்பாறிய தலைமை ஆசிரியர் R.J.நவரட்ணம் 09.03.2005ஆம் திகதியன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி M.R. இராமநாதனின் மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி A.V.யோசேப்பின் மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை செபரட்ணத்தின் அருமைக் கணவரும் Dr.தேவகிருபை (போதனா வைத்தியசாலை - கொழும்பு), தேவமலர் (கனடா), தேவகுமார் (குவைத்), தேவதர்ஷினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் திருக்குமாரன் (Document Parcel Express, Colombo), ஞானேந்திரன் (கனடா), ஜெபசாந்தினி (குவைத்), லலீத் (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் காலஞ்சென்ற அன்னரெத்தினம், வைத்தியலிங்கம், காலஞ்சென்ற ஞானம்மா அரியநாயகம் மற்றும் R.S.அரியரட்ணம், காலஞ்சென்ற சற்குணம் நாகலிங்கம் மற்றும் அருளம்மா துரைரட்ணம், பரிமளம் சவுந்தரராஜா, R.J.குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் J.பரமானந்தத்தின் அருமை மைத்துனரும் அபிகேயில், டேவிட், அனா, தர்ஷன், எஸ்தர், எபனேசர், ஜெபஹரன், தனுஜன், நிருஜன் ஆகியோரின் அன்புத் தாத்தாவுமாவார்.

அன்னாரது பூதவுடல் 11-03-2005 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பொரளை A.F.ரேமன்ட்ஸ் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இன்று (12-03-2005) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறும் ஆராதனையின் பின் நல்லடக்கத்திற்காகப் பொரளை கனத்தைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
திருக்குமாரன் (மருமகன்).
2806381/2805548/ 0777 689870

46/9, சேனாணயக்கா
மாவத்தை,
நாவல, ராஜகிரிய.

(சி.41409) (39-17-18-42)

## சுப்பையா சிவகுரு (சிவகுருநாதன்)

(ஓய்வுபெற்ற கமத்தொழில் காப்புறுதிச் சபை வடபிராந்திய பணிப்பாளர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினதும் மற்றும் பல கூட்டுறவு சமாஜங்களினதும் முன்னாள் தலைவர்)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், இல.561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான சுப்பையா சிவகுரு அவர்கள் 06.03.2005 ஞாயிறன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - இலக்குமிப்பிள்ளை தம்பதியின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற இராசையா (Hunt) - ஆச்சிமுத்து தம்பதியின் அன்பு மருமகனும் தேம்பாமலரின் அன்புக் கணவரும் மஞ்சுளா (Vancouver), அருள்மலர் (ஆசிரியை, சைவமங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை), சுகந்தன் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கத்தின் (Vancouver) அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் லக்ஷ்மன், விருக்ஷ்மன், பிரஷன்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2005) ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு ஜெயரத்ன மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

12B, ஸ்ரேஷன் றோட்,
வெள்ளவத்தை. T.P.:2500675.

(சி/41435) (42-32-17-18)

தகவல்:
குடும்பத்தினர்.

# தமிழீழ வைப்பகங்கள் பொதுமக்களின் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும்

## பூநகரிப் பிரதேச செயலர் வேண்டுகோள்

பூநகரி,மார்ச்12

தமிழீழ வைப்பகங்கள் பொதுமக்களின் முதலீட்டை ஊக்குவிப்பனவாகீ அமையவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் பூநகரிப் பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார்.

அண்மையில் பூநகரி வாடியடிப் பகுதியில் தமிழீழ வைப்பகத்தின் ஊரகக்கிளை திறந்து வைக்கப்பட்டது. இதன் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வேண்டுகோள்விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீர்த்துளியை வைத்து ஒன்றும் செய்துவிட முடியாது. நீர்த்துளிகளை ஒன்றாக்கிக் குளத திலே சேர்க்கின்ற போதுதான் அதனால் பெரும் பயனை அடையமுடியும். அதுபோல எம்மிடம் வந்து சேர்கின்ற சிறிய தொகைப் பணங்களை வைத்து ஒன்றும் செய்யமுடியாது. அவற்றை ஒன்று சேர்த்து வைப்பகங்களில் இடும்போது இந்தப் பிரதேசத்திற்காகப் பெரும் பயன்களைச் செய்யமுடியும். இந்த வகையிலேயே நமது தேசியத் தலைவரின் எண்ணத்தில் உதித் திட்ட தமிழீழ வைப்பகம் இந்தப் பிரதேசத்திலே இன்று திறந்துவைக்கப்படுகிறது.

இந்தக் கிளையிலேயே நீங்கள் ஒவ்வொரு வரும் வைப்புச் செய்யவேண்டும். இந்தப் பிரதேசத்தின் தேவைக்கான பணத்தினை இந்த வைப்பகம் பூநகரிப் பிரதேசத்திலே பெறவேண்டும். இதுவே, நான் மக்கள் சார்பில் விடுகின்ற கோரிக்கை. இந்தப் பூநகரிப் பிரதேசம் விவசாயத்தையும் கடற்றொழிலையும் நம்பி இருக்கின்ற பிரதேசம் ஆகும். ஆனால், இந்த இரண்டு பொருள்களையும் சந்தைப்படுத்துவதற்கு ஒழுங்கான சந்தைக் கட்டமைப்பு இல்லை. பொருள்களை சந்தைப்படுத்துவதன் மூலம்தான் அவர்கள் பணத்தைத் தேடமுடியும்.

இந்த வைப்பகமானது இங்கு வாழுகின்ற கடல் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் முதலீட்டை ஊக்குவிக்கும் முகமாகவே அமையவேண்டும்.

ஒரு ஏக்கர் கரும்பில் இருந்து உற்பத்தி செய்கின்ற சீனியிலும் விட ஒரு ஏக்கர் பனையில் இருந்து உற்பத்தி செய்யும் சீனியின் அளவு மூன்று மடங்காகும். எமது பிரதேசத்தில் பனை வளம அதிகமாகக் காணப்படுகின்றது. இவ் வளத்தை நாம் கள்ளாக மாற்றக்கூடாது. இதன மூலம் நாம் நல்ல முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும்.

இந்த வைப்பகம் எமது பிரதேசத்திற்குப் பெரும்பணி ஆற்றவேண்டும். இதனால், எமது மக்கள் பெரும்பயன் அடைதல் வேண்டும் - என்றார். (8-403-202)

# கேணல் கிட்டு நினைவாக முத்தமிழ்க் கலையரங்கு

கிளிநொச்சி,மார்ச்12

கேணல் கிட்டுவின் 12ஆவது ஆண்டு நிறைவையொட்டி புலிகளின் குரல் நிறுவனம் நடத்திய முத்தமிழ் கலையரங்கு நேற்றுமுன்தினம் புதனகிழமை நிறுவனத்தின் அமலன் அரங்கில் இடம் பெற்றது.

நிறுவனத் துணைப் பணிப்பாளர் செயல் வீரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரினை திருமதி பொன். தியாகம் ஏற்றிவைத்தார். கேணல் கிட்டுவின் திருவுருவப் படத்திற்கு போராளி கவி சுடரேற்றி வைத்தார்.

கேணல் கிட்டுவின் உருவப் படத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் தீபனும், கேணல் விதுஷாவும் மலர்மாலை அணிவித்தனர்.

நிகழ்வில் சிறப்புரையினைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டின் சிறந்த வானொலி மன்றமாக விசுவமடு பிரதேச வானொலி மன்றம் தெரிவு செய்யப்பட்டு கேணல் கிட்டு நினைவுக்கேடயம் வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கவியரங்கம், தொடுவானம் என்னும் நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (8-301-352-202)

# மருத்துவ சேவை இடமாற்றத்தால் ஜெயபுரப் பகுதி மக்கள் கவலை

ஜெயபுரம்,மார்ச்12

ஜெயபுரம் பகுதியில் இதுவரை இயங்கி வந்த திருச்சிலுவைக் கன்னியர்களின் மருத்துவ சேவை இடமாற்றப்படவுள்ளதால் தாம் பெரிதும் பாதிப்படைய நேரிடும் என அப்பகுதப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜெயபுரத்திலிருந்து முழங்காவில் மருத்துவமனை 6 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளதால் இப்பகுதி மக்கள் திருச்சிலுவைக் கன்னியர்களின் மருத்துவ சேவையினையே பெருமளவில் நம்பியிருந்தனர்.

இச்சேவை வேறு இடத்திற்கு மாற்றப்படுவதால் தாம் மிகச் சிரமங்களை அனுபவிக்க நேரிடும் என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (8-219-202)




## சிவராத்திரியை ஒட்டி சமய அறிவுப் போட்டி

வட்டக்கட்சி,மார்ச்12

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின் அனுசரணையுடன் இராமநாதபுரம் மாவடி ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் சமய அறிவுப் போட்டி நடைபெற்றது. பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட இப் போட்டியில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர். (8-405-202)

## வீதி திருத்தப்படுகிறது

ஒட்டுசுட்டான்,மார்ச்12

கற்சிலைமடு ஊடான முத்தையன்கட்டு வீதியின் திருத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நீண்டகாலமாகத் திருத்தப்படாது காணப்பட்ட இவ்வீதியின் திருத்த வேலைகள் கனரக வாகனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென வீதியின் இரு மருங்கிலுமுள்ள மரங்கள் அகற்றப்பட்டு வீதி பெரிதாக்கப்படுகின்றது. (8-314-202)

## பூநகரி ம.வி. கட்டடப் பணிகள் மந்த கதியில்

பூநகரி,மார்ச்12

பூநகரி மகாவித்தியாலயத்தின் கட்டட வேலைகள் மந்த கதியில் நடைபெறுவதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

மேற்படிப் பாடசாலையில் இருமாடிக் கட்டட வேலைகள் கடந்த 7 மாதகாலமாக இழுபறி நிலையிலேயே நடைபெற்றுவருகிறது.

இக்கட்டடம் 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கட்ட வேலைகளுக்கான ஒப்பந்த திகதி முடிவுற்று ஆறு மாதங்கள் கடந்து விட்டதாகத தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (8-403-202)

# சுனாமி பாதித்த முல்லைத்தீவுப் பிரதேசத்துக்கு செஞ்சிலுவைச் சங்க உயரதிகாரிகள் விஜயம்

விசுவமடு,மார்ச்12

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமைச் செயலகப் பிரதிநிதிகள் குழு கடந்த புதன்கிழமை பார்வையிட்டது.

இக்குழுவினர் அங்கு பல்வேறு இடங்களிற்கும் சென்று கலந்துரையாடினார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபருடனும் இக்குழுவினர் கலந்துரையாடினார்கள்.

இக்கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது தொடாபாக ஆராயப்பட்டது. இதில் ஆயிரம் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அனுமதி வழங்க வேண்டுமென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சுனாமி நிவாரண விசேட செயற்றிட்ட தலைவர் திஸ்ஸ மணிலால் மேலதிக அரச அதிபரிடம் கேட்டுக்கொண்டார்.

- இதனையடுத்துப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு விஜயம் செய்த இக்குழுவினர் மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கினார்கள். கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை, முல்லைத்தீவு றோ.க. வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்குக், கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஆசிரியர்களுக்கு உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள், ,தொண்டர்களுடனான சந்திப்பு புதுக்குடியிருப்பில் உள்ள செயலகத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜெகத்பந்து அபயசிங்க, செயலாளர் நிமால் குமார், மனிதாபிமானத் தொடர்பாளர் கர்ஷ குணவர்த்தன, சுனாமி விசேட நிவாரண செயற்றிட்டத் தலைவர் திஸ்ஸ மணிலால், நிதிக்குழுத் தலைவர் பிரசன்ன தசநாயக்க, இலங்கை 'செஞ்சிலுவைச் சங்க இணைப்புப் பணிப்பாளர் த.சித்திரவேல், முல்லை. மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி து.வி.ஜெயகுலராஜா ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (8-405-204)

## முன்பள்ளி திறந்து வைப்பு

புதுக்குடியிருப்பு,மார்ச்12

சிலாவத்தை அன்னம்மாள் கோயிலடியில் புதிய முன்பள்ளி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய முன்பள்ளியின் திறப்பு விழா அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கட்டடத்தை ஜேர்மன் 'அக்றோ அக்சன்' நிறுவனத் தலைவி நாடாவெட்டி வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். தொடர்ந்து கருத்துரைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த பாலா, மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

தற்காலிகக் குடியிருப்புக்களில் திறந்து வைக்கப்படும் முன்பள்ளிகளில் முதலாவது முனபள்ளி இது என்பது குறிப்பிடத்தக்கது. (8-353-202)

## பூநகரி கூ.சங்கத்துக்கு புதிய முகாமையாளர்

ஜெயபுரம்,மார்ச்12

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளராக து.இரத்தினசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இப்பதவியில் கடமையாற்றிய நபால சுப்பிரமணியம் கடந்த 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் சேவையிலிருந்து இளைப்பாறுவதாலேயே புதிய முகாமையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்க ஒன்றியத்தின் பொது முகாமையாளராக முன்னர் கடமையாற்றியவர் து.இரத்தினசிங்கம் இவருக்கான வரவேற்பு பசார விழாவும், இளைப்பாறிய பொதுமுகாமையாளருக்கான பிரிவுபசார விழாவும் கடந்த திங்கட்கிழமை சங்க மண்டபத்தில் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் இடம்பெற்றது. (8-291-202)

## சிறப்புற நடந்த இன்னிசை நிகழ்வு

கிளிநொச்சி,மார்ச்12

சங்கீத பூஷணம் பொன்.சுந்தரலிங்கத்தின் இன்னிசை நிகழ்வு கடந்த புதன்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான க.வே.பாலகுமரன் மற்றும் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (8-305-202)

## பூநகரி - மன்னார் வீதி கடும் சேதம்

ஜெயபுரம்,மார்ச்12

பூநகரி-மன்னார் பிரதான வீதி மிகவும் சேதமடைந்து. காணப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதி மண்டைக்கல்லாறு தண்ணீர் பாயுமிடத்தில் பெரும் சேதமடைந்துள்ளது. நீண்ட தூரத்திற்கு இவ்வாறான சேதம் காணப்படுவதால் வாகனங்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே போக்குவரத்துச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (8-291-202)

## உலர் உணவு வழங்கப்படவில்லை

ஒட்டுசுட்டான்,மார்ச்12

உலர் உணவுத் திட்டத்தின் கீழ் வேலை செய்த மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச சபையால் பண்டாரவன்னியன் விழாவையொட்டி உலர் உணவுத் திட்டத்தின் கீழ் கற்சிலைமடு, பண்டாரவன்னி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்களால் செய்யப்பட்ட வேலைகளுக்கே இதுவரை பொருள்கள் வழங்கப்படவில்லை.

வேலை செய்யப்பட்டு 8 மாத காலமாகியும் இதுவரை அதற்கான உலர் உணவுப் பொருளகள் வழங்கப்படாமையால் மக்கள் விசனத்துக் குள்ளாகியுள்ளனர். (8-341-202)



வன்னிக்கு விஜயம் செய்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உயரதிகாரிகள் குழு முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு உதவிப்பொருள்களை வழங்குவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். அவர்கள் செஞ்சிலுவைச் சங்கக் கிளிநொச்சிக் கிளைக்கு விஜயம் செய்திருப்பதை அடுத்துள்ள படத்தில் காணலாம். *(படங்கள்: கேசவன்)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலணை வடக்கைச் சேர்ந்த
**கைலாசபிள்ளை ஜெகதீசன்**
அவர்கள் 11.03.2005 அன்று மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில், B.SC.Eng. (Hons) என்னும் பட்டம் பெற்றதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சுப்பிரமணியம் மகேந்திரன் குடும்பத்தினர்

16/2, சீனியர் ஒழுங்கை
கலட்டி, யாழ்ப்பாணம். (42992)(33-46-11-45)



## வேலையாளர்கள் தேவை

- ♦ உணவு பரிமாறுவோர் (சப்பிளயர்)
- ♦ சமையல் உதவியாளர்

ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**"பாரத் உணவகம்"**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (42989)(33-11-45)


## கோழிகளுக்குத் தடுப்பு மருந்து

அரியாலையில் உள்ள நல்லூர் கமநல சேவைகள் உப அலுவலகத்தினால் அப்பிரதேசத்தில் உள்ள பண்ணையாளர்கள் மற்றும் தனியாருடைய வளர்ப்புக் கோழிகளுக்கு இலவச நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் பண்ணையாளர்கள் பிரதி செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மாலை 2 மணிமுதல் 4 மணிவரை மேற்படி அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-30)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**அரியகுட்டி நவரத்தினம்**
(முன்னாள் ரெலிகொம் உத்தியோகத்தர்)

பிறப்பு
08.02.1940
இறப்பு
23.02.2004

திதி: 2005-03-12

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க ஓர் உறவு இல்லையே!
ஆண்டொன்று ஆனதப்பா
உங்கள் பிரிவின் துயர் ஆறவில்லையே!
வாழ்வாங்கு வாழவைத்த எம் அன்புத் தெய்வத்தை
நினைவு கூர்ந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (42993)(24-33-11-45)

மனைவி,
மகள்.


## கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம்,மார்ச்12

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல மனையியல் கண்காட்சியும் விற்பனையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் காலை 10மணி முதல் ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

உடுவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீரி. ஞானசேகரவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக உடுவில் உதவிப் பிரதேச செயலர் த.மஞ்சுளா தேவி, யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா. தியாகமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர். (8-204)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி இராசா-மலர்**

தோற்றம் 03-02-1950
மறைவு 24-02-2001

திதி: 12.03.2005

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
மறைந்து
நான்காண்டுகள் கடந்தாலும்
உள்ளத்தில் உங்கள்
நினைவுகள் என்றுமே மாறாது; மறையாது!

இ.இராஜேஸ்வரன் குடும்பத்தினர்
(சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்)

'இன்பபவனம்',
நாவலடி,உடுப்பிட்டி (42991)(33-11-45)



## மரண அறிவித்தல்

**திருமதி பரிமளம் சோமசுந்தரம்**



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பரிமளம் சோமசுந்தரம் அவர்கள் 08.03.2005 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் ஏழாலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் ஞானச்சந்திரன் (முன்னாள் அத்தியட்சகர், கடதாசி ஆலை, வாழைச்சேனை - சோதிடர், இந்தியா), பிறேமச்சந்திரன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா), அமரர் ஜெயச்சந்திரன் மற்றும் சாரதாதேவி (ஆசிரியை, அறநெறிப் பாடசாலை), அமரர் தயாளச்சந்திரன் மற்றும் விமலச்சந்திரன் (கனடா), அமரர் ஜெயச்சந்திரன் மற்றும் மங்களாதேவி (ஆயுள்வேத வைத்தியர்), சுந்தரகுமாரன், ஞானரோகினி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபத்திராதேவி, இரட்ணசோதி சிறிதரன் (ஏறாவூர் தெற்கு ப.நோ.கூ.சங்க முன்னாள் ஊழியர்), சறோஜினிதேவி, விநாயகமூர்த்தி (நீர்ப்பாசனத் திணைக்களம், முருங்கன்), கமலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அமரர் முத்துத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அமரர் செல்லையா (ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர்) மற்றும் கதிரவேலு, காமாட்சி, சிவக்கொழுந்து, பகவதிப்பிள்ளை, சாந்தநாயகி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாவகச்சேரி, கச்சாய் வீதி, உப்புக்கேணிச் சந்திக்கருகில் அமைந்துள்ள இல்லத்தில் நாளை (13.03.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.0777 843961 (42997)(33-11-45)

தகவல்:
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.



## இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள சுனாமியினால் பாதிக்கப்பட்ட 2005 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்காக தமிழ் தகவல் தொழிநுட்ப ஒருங்கமைப்பு (TITA) டயலொக்G.S.Mஉடன் இணைந்து யாழ். முன்னணி ஆசிரியர்களினால் நடத்த ஏற்பாடு செய்துள்ள இக்கருத்தரங்கில் அனைத்து மாணவர்களும் பங்குபற்றிப் பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: வட இந்துமகளிர்கல்லூரி, பருத்தித்துறை.
நேரம்: பி.ப. 3.00 - 6.00 வரை

14.03.2005 - திங்கட்கிழமை - இணைந்த கணிதம், வர்த்தகம் & கணக்கீடு
15.03.2005 - செவ்வாய்க்கிழமை - இணைந்த கணிதம், தமிழ்
16.03.2005 -புதன்கிழமை -இரசயானவியல், வர்த்தகம் & கணக்கீடு
17.03.2005 - வியாழக்கிழமை - இரசாயனவியல், தமிழ்
18.03.2005 - வெள்ளிக்கிழமை - பௌதிகவியல், வர்த்தகம்&கணக்கீடு
21.03.2005 - திங்கட்கிழமை - பொருளியல், அளவையியல்
22.03.2005 - செவ்வாய்க்கிழமை - பொருளியல், அளவையியல்
23.03.2005- புதன் கிழமை - பொருளியல், இந்து நாகரிகம்
24.03.2005 - வியாழக்கிழமை - உயிரியல், இந்து நாகரிகம்
25.03.2005 - வெள்ளிக்கிழமை - உயிரியல்

குறிப்பு:- மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடம் சம்பந்தமாகவும் பரீட்சைக்கு பயன் மிக்க பாடக்குறிப்புக்கள் இலவசமாக அச்சிட்டு வழங்கப்படும்.

**Dialog**

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு
Information Technology Association

(C-41439) (53-11-15)



Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7667602 முதல் 7679631 வரை
சீட்டிழுப்பு இல. 116 திகதி 10-3-2005

வெற்றி எண்கள் **692686** சுப்பர் எண் **10**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,06,83,350/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,03,83,350/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 5,000/- | 5,15,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,033 | 500/- | 5,16,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,352 | 50/- | 5,17,600/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 102,535 | 10/- | 10,25,350/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 13 | 5,000/- | 65,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 1,000/- | 1,02,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,042 | 100/- | 1,04,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,251 | 20/- | 2,05,020/- |
| மொத்தம் | 125,449 | | 51,03,270/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 51,03,270/-

இந்த திங்கட்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,09,71,050/-**
தொடர் இல. 6721623 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 14 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7673840-8-70
7672449-4-85
7673493-1-68
7670394-0-24
7671017-7-91
7674442-3-93
7674798-3-54
7675615-2-34

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இளவாலை வடக்கைச் சேர்ந்தவரும், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் (99 AL) மாணவனுமாகிய

**செல்வன்**
**செல்லத்துரை அகிலன்**
**(B.Sc.Eng. (Hons))**

அவர்கள் நேற்று (11.03.2005) வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், இவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய எல்லாம்வல்ல ஆனைவிழுந்தான் வீநாயகர், இலுப்பையடி ஞானவைரவர் திருவருள் பாலித்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை.
(43000) (38-45-14)

வாழ்த்துவோர்:
அன்புள்ள அப்பா, அம்மா,
செ.அகல்யா (தங்கை கலைப்பீடம் யாழ்.பல்கலைக்கழகம்)
செ.பிரசாத் (தம்பி மருத்துவபீடம் யாழ்.பல்கலைக்கழகம்).

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 55 ஆம் நாள் நினைவஞ்சலி

ஈழத்தில் முகிழ்வு
17 - 01 - 1949



ஜேர்மனியில் மறைவு
17 - 01 - 2005

விஸ்வப் பிரம்ம ஸ்ரீ

**ஆறுமுகம் மகாலிங்கம்**

நீள் நிலத்தை விட்டு நெடுந்தூரம்
நீ சென்று ஐம்பத்தைந்து நாளாச்சே!
ஆண்டு பல உருண்டாலும் எம் அகத்தில்
உன் நினைவு அகலாது எந்நாளும்!

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி. (43010) (38-45-14)

ஆறுமுகம் சிற்பாலயம்
அன்புச் சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி நந்தினி தனேந்திரகுமாரன் அவர்களின் அன்புத் தந்தை **'கான இசைமணி' ரங்கன் (தனேந்திரகுமாரன்)** அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை.
(சி-41443) (38-45-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
20 - 07 - 1947



உதிர்வு
11 - 02 - 2005

**அமரர் விஸ்வநாதன் சிவானந்தராசா**

(ஓய்வுபெற்ற - பட வரைஞர், தொழில்நுட்ப அத்தியட்சகர், மகாவலி நீர்ப்பாசனத் திணைக்களம் / ரெட்பானா)

**அன்புடன் ஆதரவு தந்த அன்புத் தெய்வமே!**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எங்கள் இதயத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மலர்வளையங்கள் வைத்து மலர்தூவி மலரஞ்சலி செலுத்தியவர்கள், உள்ளூர் - வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள், ஆறுதல் கூறியவர்கள், யாழ்.போதனாவைத்தியசாலையில் இறுதி மூச்சுவரை சகல வழிகளிலும் உதவி புரிந்த டாக்டர்கள், தாதிமார்கள், பணியாளர்கள், எல்லாவகையிலும் உதவி புரிந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள் -

மேலும் நாளை (13.03.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்றோட்,
அளவெட்டி. (43005) (38-45-14)

மனைவி, பிள்ளைகள், திரு.திருமதி
அ.விஸ்வநாதன் (தாய்தந்தை)
சகோதரர்கள்.

## ஆசிரியர் தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.

தயவு செய்து நேரில் வருக.
நேரம் : பி.ப. 4 மணி
காலம்: ஞாயிறு 12.03.2005

பொற்பதி வீதி,
கோண்டாவில். -தாயகம்.
(சி41454) (38-45-14)

## உடன் தேவை

பொதிசெய்யும் வேலைக்குப் பெண்கள் தேவை.
வேலை நேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை.
தொடர்பு: 57, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (42995) (38-45-14)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஆர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்த

**மாயாவி** (சீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
லியோனாட்டிக் - அப்பிறோ கேட் நடித்த

**டைட்டானிக்** (சீல்ஸ்)
காட்சி நேரங்கள்: 10.30, 2.30.

ரஜனி, அம்பிகா நடிப்பில்
**நான் சிகப்பு மனிதன்**
காட்சி நேரங்கள்: 6.30, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த

**லண்டன்** (சீல்ஸ்)
இயக்கம்: சுந்தர் C

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜய், திரிஷா நடித்த

**திருப்பாச்சி**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

சரத்குமார், நமிதா, வடிவேல், கபாலி நடித்த



**ஏய்** (சீல்ஸ்)
தினசரி
11.00, 3.00, 7.00 (பு.நே)

## மரண அறிவித்தல்

### திருமதி நமசிவாயம் பொன்னம்மா

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வைமன வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமசிவாயம் பொன்னம்மா நேற்று 11.03.2005 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்து நமசிவாயத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குருசாமி (முன்னாள் தொழில் நீதிமன்ற நீதிபதி) மற்றும் திலகவதி, யோகவதி, பூபாலபிள்ளை, சறோஜினிதேவி (மாவட்ட நீதிபதி, மல்லாகம்), Dr.சிவபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பராசக்தியம்மா, காலஞ்சென்ற சிவகடாட்சம்பிள்ளை (ஆசிரியர்) மற்றும் தியாகராசா (முன்னாள் கணக்காளர், ஜனவாசம), லலிதாதேவி, இளங்கோவன் (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் - ஊர்காவற்றுறை), சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*40/5, வைமன் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.
(43011) (38-45-14)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சங்கத்தார் வயல் இயக்கச்சியைச் சேர்ந்த **சிவா-லீலா** தம்பதியினரின் ஏகபுத்திரி **பாமிலா (நீலா)** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (12.03.2005) சனிக்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, ஐயா, அம்மம்மா, அண்ணாமார்கள் செந்துஷன், பானுஷன், மாமாமார், அத்தைமார்கள், சித்தப்பாமார், அன்ராமார், அத்தான் (விதுஷன்) மற்றும் அத்தான்மார், மச்சிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுபல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

**பாமிலா (நீலா)**

சங்கத்தார் வயல்,
இயக்கச்சி.
0776948472 (43008) (38-45-14-56)

தகவல்:
அத்தை (நந்தா)
சித்தா (பாலினி).

## பெயர்மாற்றம் பற்றிய அறிவித்தல்

கல்வளை வீதி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த முத்துலிங்கம் பஞ்சலிங்கம் ஆகியநான் இன்று (12.03.2005) சனிக்கிழமை முதலாக எனது பெயரை **முத்துலிங்கம் மைக்கேல் ஜாக்சன்** என்று பெயர்மாற்றம் செய்துகொள்கின்றேன். ஆகவே, எனது சகல ஆவணங்களிலும் இனிமேல் நான் மைக்கல் ஜாக்சன் என்றே குறிப்பிடுவேன் என்று இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

கல்வளைவீதி,
சண்டிலிப்பாய். (சி-41440) (38-45-14)

முத்துலிங்கம்
மைக்கேல் ஜாக்சன்

## UNIVERSITY OF JAFFNA - FACULTY OF SCIENCE

**NOTICE**

**Applications for Honours Degree & B.Sc.(With Education) Courses**

**(2004 / 2005 Academic Year)**

Applications for Honours Degree & B.Sc.(With Education) Courses will be entertained up to 30th March 2005 from the students who sat the Second Examination in Science, 2004&2004 (A) Second Semester. Application forms could be obtained from the office of the Dean.

**Vice - Chancellor**
**2005-03-11** (சி-41452) (38-45-14)

**University of jaffna**
**Jaffna.**

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் முருகன்

அல்லாரை வடக்கைச்சேர்ந்த சண்முகம் முருகன் 10.03.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சோதிமலர், புஸ்பமலர், ராசலட்சுமி, ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2005) சனிக்கிழமை காலை 10மணிக்கு அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*பெரிய அரசடி, சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

தகவல்:-
மு.ரவிச்சந்திரன் (ரவி-மகன்)
(லக்கி சலூன் உரிமையாளர்)
(43006) (38-45-14)

### திருமதி சரவணமுத்து நல்லம்மா

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சரவணமுத்து நல்லம்மா 10.03.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் அருணாசலம் சண்முகம், காலஞ்சென்ற கமலேஸ்வரி, சாந்தலிங்கம், மகாலிங்கம், கௌரியம்மா, பரமலிங்கம், பற்பநாதன், சோமசுந்தரம், நீலாம்பிகை, மயிலாம்பிகை, தயாளேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவி, சீதாலட்சுமி, காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற சுந்தரேஸ்வரி மற்றும் சச்சிதானந்தம், யோகேஸ்வரி, சிவநேஸ்வரி, இராசரெத்தினம், வரதராஜா, காலஞ்சென்ற புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2005) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நயினாதீவில் நடைபெறுமென்பதை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (43007) (38-45-14)

தக...
ச.சாந்...
(ம...

# இலங்கையின் கபட வலைக்குள் இந்தியா விழுந்துவிடக்கூடாது!

## நாடாளுமன்ற உரையில் சம்பந்தன் எச்சரிக்கை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் உதவியைக்கோரும் அரசு, பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்வதில் மும்முரமாகச் செயற்படுகின்றது. இலங்கை அரசின் கபட வலைக்குள் இந்தியா சிக்கிவிடக் கூடாது என்று எச்சரிக்கை செய்கிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இதனை நேற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக இலங்கை அரசிடம் ஸ்திரமான ஒருநிலைப்பாடு இல்லை. நாட்டுக்கு நாடு மாறுபட்ட கருத்துக்களை இலங்கை தெரிவிக்கின்றது.

இரட்டைக் குரலில் பேசும் அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. அதற்கு அவர்களிடம் உருப்படியான திட்டங்களும் இல்லை - என்றும் சம்பந்தன் எம்.பி.சாடினார்.

இந்தியாவுக்கு விஜயம்செய்த வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர், இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியம் - இந்தவிடயத்தில் இந்தியாவின் பங்களிப்பை - நிலைப்பாட்டை - அதிகரிக்கவேண்டும்; தீவிரமாக்கவேண்டும் - என்றெல்லாம் மண்டியிடுகின்றார்.

அதே கதிர்காமர் பாகிஸ்தானுக்குச் சென்று அவர்களின் புகழ்பாடுகின்றார். தக்கசமயத்தில் பாகிஸ்தான் உதவியிருக்காவிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதோ தமிழீழத்தை அமைத்திருப்பார்கள் என்று பாகிஸ்தானை சந்தோசப்படுத்தி பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள மும்முரமாகச் செயற்படுகின்றார்.

அதோடு நின்றுவிடவில்லை. சீனாவுக்கு சென்றபோது சீன அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியமைக்காக சீனாவுக்கு நன்றி தெரிவிக்கின்றார். நாட்டுக்கு நாடு தேசத்திற்கு தேசம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நிறத்தை மாற்றிக்கொள்ளும் இலங்கை அரசின் சூழ்ச்சி வலைக்குள் இந்தியா சிக்கிவிடக்கூடாது - என்று சம்பந்தன் எம்.பி.மேலும் கூறினார்.

### ஞாயிற்றுக்கிழமைகளில் ரியூசன் வகுப்புக்குத் தடை வருகிறது

கொழும்பு.மார்ச்12

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை ரியூசன் வகுப்புகளை நடத்துவதற்கு அரசு தடைவிதிக்கத் தீர்மானித்துள்ளது.

வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை முதல் நண்பகல் வரை சமய வகுப்புகள் நடைபெற்று வருவதனாலேயே இந்த நேர இடைவெளியில் தனியார் வகுப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்க அரசு தீர்மானித்துள்ளதாக கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தான் அமைச்சரவைக்கு இது தொடர்பாகத் தெரிவித்த ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பதாகவும் -

இதற்கான சட்டங்களை இயற்றும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் - அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-12)

### மகாஜனா 130 ஓட்டங்களைப் பெற்றது

வலி.வடக்கு.மார்ச்12

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையேயான முதல்நாள் ஆட்டத்தின் போது மகாஜனக் கல்லூரி சகல விக்கட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணியினர் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 4 விக்கெட் இழப்பிற்கு 117 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல் நாள் ஆட்டநேரம் முடிவடைந்தது.

இதேநேரம் நிஷாகரன் 43 ஓட்டங்களுடனும் நிரோஜன் ஓட்டங்கள் எடுக்காத நிலையிலும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். (எ-86)

### ஜே.வி.பியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி அரசினுள் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதென்று மேற்படி சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் நேற்றையதினம் அமைச்சர் கதிர்காமரின் இல்லத்தில் மற்றுமொரு சந்திப்பு நடைபெறவிருந்தது.

இந்நிலையில், நேற்றுக்காலை அமைச்சர் கதிர்காமரை அழைத்த ஜனாதிபதி சந்திரிகா, இந்தச் சந்திப்பை ரத்துச்செய்யுமாறு, ஜே.வி.பியுடன் இவ்வாறான இணக்கப்பாட்டுப் பேச்சுக்களைத் தொடரவேண்டாமென்று அறிவுறுத்தல் வழங்கினார் எனத்தெரியவருகிறது.

இவ்வாறான அறிவுறுத்தல்கள் ஜே.வி.பியினருக்கு நெருக்கமுடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏனைய அமைச்சர்கள் பலருக்கும் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (எ-க)

### மோ. சைக்கிளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தனர்.

இதனால் ஏ-9 வீதியில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் வேறு மார்க்கங்கள் ஊடாகத் திருப்பிவிடப்பட்டன.

இராணுவக் காவலரண்கள் தாக்கப்பட்டன. வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டது. வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. பொதுமக்கள் வன்முறையில் ஈடுபட ஆரம்பித்ததும் வீதிக் கடமையில் இருந்த இராணுவத்தினரும் வீதியோரக் காவலரண்களில் இருந்த சிப்பாய்களும் முகாம்களுக்குத் திருப்பி அழைக்கப்பட்டனர்.

சங்கத்தானை முதல் சாவகச்சேரி வரையில் வீதியோரம் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் மக்களால் அடித்து நொறுக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன.

சம்பவத்தையடுத்து சாவகச்சேரி நகர்ப்பகுதிக் கடைகள், சந்தை அனைத்தும் மூடப்பட்டு மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். பாடசாலை மாணவர்கள் வேறு பாதைகள் வழியாக வீடுகளுக்குச் சென்றனர்.

மாலை 5 மணியளவில் சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கத்தின் முன்பாக உள்ள இராணுவக் காவலரணை மக்கள் எரிக்க முற்பட்டபோது இராணுவத்தினருக்கும் அவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக இராணுவத்தினர் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். சுமார் 5 நிமிடங்களுக்கு அந்தப் பகுதியில் தொடர்ச்சியான சூட்டுச் சத்தங்கள் கேட்டன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக கலகம் அடக்கும் பொலீஸார் வரவழைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், நேற்று முன்னிரவுவரை நிலைமைகள் பெரும் பதற்றமாகவே இருந்தன.

இதற்கிடையில் -

மேற்படி சம்பவத்தை அறிந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் ஸ்தலத்துக்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டனர். (எ-3-31-117-15-86-12-74)

### இரவில் தகாதசெயல் புரியும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றோடு ஒழியட்டும்!" போன்ற கோஷங்களை மக்கள் உரத்து முழங்கினர்.

நெல்லியடிப் பொலீஸ் பொறுப்பதிகாரி, புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பிரதிநிதிகள் ஆகியோர் பொதுமக்களுடன் கலந்துரையாடி சமரசம் செய்ய முயற்சி மேற்கொண்டனர்.

அப்போது சம்பந்தப்பட்ட படையினரை இனங்கண்டு அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று மக்கள் வலியுறுத்தினர்.

சிப்பாய்களை அடையாளம் காட்டக்கூடியவர்களை இராணுவ முகாமுக்குள் அழைத்துச் சென்ற சமரசக் குழுவினர், கிராமத்துக்குள் நுழைந்த சிப்பாய் ஒருவரை இனங்கண்டனர். அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என படை அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஏனையோரும் இனங்காணப்பட்டு, அவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மக்கள் கோரினர்.

நண்பகல் 12.30 மணியுடன் தமது போராட்டத்தை நிறுத்திய பொதுமக்கள், ஏனைய படையினர் இனங்காணப்படாவிட்டால் இன்றும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

மக்களின் எதிர்ப்புப் போராட்டம் காரணமாக வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையிலான போக்குவரத்து நேற்று நண்பகல் வரை தடைப்பட்டிருந்தது. (எ-3-70-15-78-173-86)

### நீர்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாளர்களும் பேரணியில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும் என யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் கேட்டுள்ளார். (எ)

### சாவகச்சேரியிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குடியிருப்பு மக்கள் கிளர்ந்தெழுந்து படையினரைக் கோபாவேசத்துடன் எதிர்த்ததால் நேற்றுப் பெரும் ரகளை ஏற்பட்டது.

வீதியில் இறங்கிய மக்கள், படையினருக்கு எதிராக மறியல் செய்தனர். ரயர்களை எரித்தும் வீதிப் போக்குவரத்தைத் தடைசெய்தும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சில மணி நேரத்துக்குள் சாவகச்சேரி நகரில் இராணுவ வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிளை மோதிப் பந்தாடியது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற சிவிலியன் ஒருவர் படுகாயமடைந்தார்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து இராணுவ வாகனத்தை அப்புறப்படுத்திவிட உடனடியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியைக் கண்டுகொதிப்படைந்த இளைஞர்கள் அதனைத் தடுத்துவிட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றமும் முறுகலும் ஏற்பட்டது. கலகத்தடுப்புப் பொலீஸாரோடும் படையினரோடும் பொதுமக்கள் மோதினர். இதனால் சாவகச்சேரி நகரம் சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

இராணுவத்தினர் பெண்கள் மீது புரியும் தகாத செயல்களும், இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்ட வீதி விபத்துக்களின்போது பொலீஸ் ஒழுங்கு விதிகள் - நடைமுறைகள் - அப்பட்டமாக - விபத்துக்கான தடயங்களை மூடிமறைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளும் பொதுமக்களைச் சீற்றத்துக்குள்ளாக்கி வருகின்றன.

படையினர் மற்றும் பொலீஸாரின் பிரசன்னத்தை அடியோடு எதிர்க்கின்ற மனநிலை மக்கள் மத்தியில் அதிகரித்துவருவது பொது அமைதிக்குப் பெரும் பங்கமாக மாறிவருகின்றது. போர்நிறுத்த கால அமைதிச் சூழலுக்கு இதனால் எந்தவேளையும் ஆபத்து நேரும் என்ற அச்சமும் உருவாகி வருகின்றது.

இராணுவ அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது கடும் அதிருப்தியையும் கண்டனத்தையும் கண்காணிப்புக் குழுவிடம் தெரியப்படுத்தியிருக்கின்றனர்.

இந்தப் பதற்ற நிலைமை விரைந்து தணிக்கப்படாதுவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுவிடலாம் என்று சமூகத் தலைவர்கள் அஞ்சுகின்றனர். (ஐ-3-31-117-70-173-15-74-78-86)

### முதலில் பொதுக்கட்டமைப்பில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்; அதனை வெகுவாக வரவேற்கிறேன்.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் மக்கள் சமூகம் இன,மத, பேதங்களுக்கு அப்பால் ஒன்று சேர்ந்ததை எம்மால் காணமுடிகிறது. தெற்கை அபிவிருத்தி செய்வது போன்று வடக்கு - கிழக்கிலும் நாம் எமது பணிகளை மேற்கொள்ளவேண்டும். அந்தப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் அணைத்துக்கொண்டு பொதுக்கட்டமைப்பொன்றை அரசு ஏற்படுத்தவுள்ளது.

இதனை மாற்றுக் கண்களோடு நோக்கக் கூடாது. அரசின் இந்த யோசனையை ஆட்சேபித்தவர் முதலில் இதனை மனிதாபிமானப் பணியாக நோக்கவேண்டும். வடக்கு - கிழக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் அந்த மக்களின் மனங்களைத் திசைமாறாமல் பார்த்துக்கொள்ளலாம். இந்த முயற்சிகளுக்கு அடுத்தபடியாக சமாதான முன்னெடுப்புகளையும் நகர்த்தலாமென்பது எனது நம்பிக்கையாகும். சமாதான முயற்சிகளை இனிமேலும் பிற்போடமுடியாது. யார் எதிர்ப்பைத் தெரிவித்தாலும் சமாதானத்திற்காக முன்வைத்த காலை நான் பின்வைக்கப்போவதில்லை.

#### கட்சி மறுசீரமைப்பு

சுதந்திரக்கட்சியை முற்றுமுழுதாக மறுசீரமைக்க வேண்டிய தேவையுள்ளது. பதவி மற்றும் இதர சில்லறை சொகுசுகளுக்காகக் கட்சியைப் பயன்படுத்துவோரும் நம்பியிருப்போரும் இனிமேலும் அவ்வாறு இருக்கமுடியாது. அவ்வாறு இருக்க நினைப்பவர்கள் கட்சியிலிருந்து வெளியேறலாம். கட்சிக்குள் ஒழுக்கம் தேவை. சிறந்த செயற்திட்டங்கள் அவசியம்.

கட்சிக்குள் இருக்கும் தொழிற்சங்கங்கள் ஒழுங்காகச் செயற்படவேண்டும். அரச சேவை...ளில் பெரும்பாலானவை சீர்குலைந்துள்ள ...மை மாறவேண்டும் - என்றார்.

#### ஊடகவியலாளர் வெளியேற்றப்பட்டனர்

இதற்கிடையில், நேற்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15ஆவது தேசிய மகா சம்மேளனக் கூட்டத்தின் செய்திகளைச் சேகரிப்பதற்காக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவினரால் மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குக் கூட்டிச்செல்லப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களும் அதே ஊடகப்பிரிவினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்தச் சம்மேளனக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றமாட்டாரென்று காரணம் கூறப்பட்டே ஊடகவியலாளர்கள் திருப்பியனுப்பப்பட்டனர். ஆனால், ஊடகவியலாளர்கள் திருபியனுப்பப்பட்டமைக்கு வேறு காரணம் இருந்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் கூறின. நேற்றைய சம்மேளனக் கூட்டத்தின் போது ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை அறிவிக்க வேண்டுமென கூட்டத்தில் ஒரு சாரார் சர்ச்சையொன்றைக் கிளப்பவுள்ளனர் என ஜனாதிபதியின் கவனத்திற்கு நேற்றுப் பகல் கொண்டு வரப்பட்டது.

அதேசமயம், மருத்துவ சோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பிரதமர், அங்கிருந்து நேராகச் சம்மேளனக் கூட்டத்திற்கு வருகைதந்தபோது நீண்டநேர கரகோஷங்களுக்கு மத்தியில் கட்சி ஆதரவாளர்கள் அவரை வரவேற்றனர். ஜனாதிபதி வேட்பாளரே வருக என்றும் குரல்கள் எழுந்தன.

இந்நிலையில், பிரதமர் மஹிந்தவுக்கு ஆதரவாக அவ்வாறான ஒரு சர்ச்சை எழுந்தால் அது ஊடகங்களில் வெளிவந்து கட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதியே ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று கூறப்பட்டது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றமாட்டார் என ஊடகவியலாளர்களுக்குக் கூறப்பட்டு அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். எனினும் பின்னர் அக்கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க-12)

கணக்கீடு
2006 A/L
தீயறிவும் காப்புறுதிக் கோரிக்கையும்
ஆசிரியர்:
R.வின்சன்
(B.B.A. HRM spl.)
ஆரம்பம்: 13.03.2005
(Sun - 10.30)
விவைல்ஸ்
K.K.S. வீதி, கன்னாகம்

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை மகேஸ்வரன்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகேஸ்வரன் 11.03.2005 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*'காந்தினி வாசா'*
*95, புகையிரத நிலையவீதி,*
*கொக்குவில் கிழக்கு.*
*கொக்குவில்.*

தகவல்:
மனைவி, மக்கள், மைத்துனர்
சே.சிவசுப்பிரமணியம்.

(43013)(14-45-55-38)

### கார்த்திகேசு கந்தப்பு

(ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

ராணி மாளிகை, அந்திரான், கரவெட்டி வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு கந்தப்பு 11.03.2005 அன்று காலமானார்.

அவரது ஈமைக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
கி. ரவிக்குமார் (மருமகன்).

(சி-41456)(14-45-55-38)

### கந்தர் சின்னத்தம்பி

31/2, கலட்டியைப் பிறப்பிடமாகவும் 54/9, ஆத்திசூடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சின்னத்தம்பி வெள்ளிக்கிழமை 11.03.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் சண்முகம், குணரட்ணம் (குகன் களஞ்சியம் - திருநெல்வேலி), செல்வராஜா (லண்டன்), காலஞ்சென்ற தவமணி, திரவியம், செல்வராணி, இரத்தினம்கிளி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*54/9, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குணரட்ணம் (மகன்)
(குகன் களஞ்சியம்-
திருநெல்வேலி).

(43012)(14-45-34-38)

...ரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.03.2005 ...சிட்டு வெளியிடப்பெற்றது.